விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 08 சனிக்கிழமை (20.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 063

## அகிம்சைப் பேரணியில் பங்கேற்றமைக்காக தமிழ்ப் பிரதிநிதிகள் பலரிடம் பொலிஸார் விசாரணை


சிறீதரன்


செல்வம் அடைக்கலநாதன்


சார்ள்ஸ் நிர்மலநாதன்


கலையரசன்


சாணக்கியன்


மணிவண்ணன்

19

### கடற்படை முகாம் அமைப்பதற்காக

## காரைநகரில் காணி அபகரிப்பு மக்களின் எதிர்ப்பால் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் நீலங்காடுப் பகுதியில் கடற்படையினரின் தேவைகளுக் காகப் பொதுமக்களின் காணிகளை அபகரிக்க எடுத்த முயற்சி பொது மக்களின் எதிர்ப்பையடுத்து தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் ஜே45 கிராமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட 67 பேருக்குச் சொந்தமான 50 ஏக்கர் காணி கள் கடற்படையினரின் தேவைகளுக்காகச் அபகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. 19



### காணாமல் ஆக்கப்பட்ட மகனைத் தேடி அலைந்த தாய் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக் கப்பட்டவர்களின் உறவினர் கள் அமைப்பில் உறுப்பினராக இணைந்து தனது மகனைத் தேடி 19

### ஜெனிவாவில் ஆதரவு கோரி பிரதமர் மோடிக்கு இலங்கை கடிதம்

(கொழும்பு)

இந்த முறை ஜெனிவா மனித உரிமை மாநாட்டில் இலங்கைக்கு தேவையான ஒத்து 19

## தஞ்சம் புகுந்த தமிழரை திருப்பி அனுப்பாதீர் சுவிஸ் தூதுவரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

சுவிஸில் தஞ்சம் புகுந் துள்ள தமிழ் மக்களை உடனே திருப்பி அனுப்ப கூடாது என இலங்கைக் கான சுவிற்சர்லாந்து தூது வரிடம் தமிழ் தேசிய கூட்ட மைப்பு வலியுறுத்தியுள்ளது. இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுபபினர்களுக்கு இடையிலான கலந்து ரையாடல் நேற்று முன் 19

## விபரீத முடிவெடுத்த இளம் வர்த்தகர் மரணம்

### யாழ்.அச்செழுவில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் விப ரீத முடிவெடுத்த இளம் வர்த்தகர் ஒருவர் 19

## மிருசுவிலில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 5 பேர் உட்பட

### வடக்கில் 10 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

மிருசுவிலில் ஒரே குடும்பத் தைச் சேர்ந்த 5 பேர் உட்பட வடக்கில் நேற்று 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகி யுள்ளது.

இதில் 8 பேர் யாழ் மாவட்டத்தை சேர்ந்த 19

### இலங்கை விவகாரத்தில்

## சர்வதேசம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

### முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர்கள் கோரிக்கை

03ஆம் பக்கம் பார்க்க

### கொரோனா +506

(கொழும்பு)

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 506 பேர் நேற்று 19

### எழுமாற்றுப் பரிசோதனை

## நெல்லியடியில் சந்தை வியாபாரிக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி நெல்லியடி மரக்கறி சந்தையில் எழுமாற் றாக மேற்கொள்ளப்பட்ட பரி சோத னையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு 19

### சகோதரிக்கு விபத்து

## அதிர்ச்சியில் குடும்ப பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

சகோதரிக்கு விப த்து நடந்ததை அறி 19

### யாழ்ப்பாண முத்தீவுகளில்

## சீனாவுக்கு வழங்கப்படவுள்ள காணிகளை அடையாளப்படுத்திய

### இலங்கை மின்சார சபை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய வற்றில் மின்உற்பத்தி திட்டத்திற் காக சீனாவுக்கு நிலம் வழங்கப் படவுள்ள நிலையில், இலங்கை மின்சார சபை காணி களை அடையாளப் 19

# வல்லப்பட்டையுடன் வவுனியாவில் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் வல்லப்பட்டையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா புளியங்குளம் விசேட அதிரடிப்படையினரினால் கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பேருந்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது வல்லப்பட்டையு டன் 25 வயதுடைய இளைஞன் ஒருவரை கைதுசெய்து ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த இளைஞனிடம் இருந்து 700 கிராம் வல்லப்பட்டை மீட்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.(ம-03,299)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரப்பட்டால்

# மனிதவுரிமைகள் பேரவை இரண்டாகப் பிளவுபடும்

## அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை

(கொழும்பு)

ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரப்பட்டால் மனிதவுரிமைகள் பேரவை இரண்டாகப் பிளவுபடும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இம்முறை ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை பக்கச் சார்பானது. 'தருஸ்மன்' அறிக்கையை அடிப்படையாக கொண்டதோர் அறிக்கையாகவே இது அமைந்துள்ளது. 'தருஸ்மன்' அறிக்கை பொய் காரணிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டதென டெஸ்மன்சில்வா முதல் சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தின் விசாரணைகளில் பலர் கூறியுள்ளனர்.

வெளியாகியுள்ள ஜெனீவா அறிக்கையை நாம் முற்றாக நிராகரித்துள்ளோம். ஆனால், கடந்த முறை நாம் போர்க் குற்றங்களை புரிந்தோமென நல்லாட்சி அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருந்தது.

அந்த அறிக்கையை நாம் ஏற்றுக்கொண்டால் மனிதவுரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் ஒரு நாடு கூட எமக்கு ஆதரவாகச் செயற்படாது.

காரணம் அறிக்கையை ஏற்றுக்கொள்வதன் மூலம் நாம் போர்க்குற்றங்களை புரிந்துள்ளோமென ஏற்றுக்கொள்வதற்கு சமமாகும்.

ஆனால், இம்முறை அறிக்கையை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளதுடன், நல்லாட்சி அர சாங்கம்வழங்கியிருந்த இணை அனுசரணையையும் மீளப் பெற்றுள்ளோம்.

அதன் காரணமாக பல நாடுகள் எம்முடன் கைகோர்த்துள்ளன.

இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி, மொன்டகிரினோ, மெசடோனியா போன்ற நாடுகள் இணைந்து இம்முறை ஜெனீவா மாநாட்டில் தீர்மானமொன்றை கொண்டுவர உள்ளதாக அறிய முடிகிறது.

அவ்வாறனதொரு தீர்மானம் கொண்டுவரப்படும் பட்சத்தில் மனிதவுரிமைகள் பேரவை இரண்டாகப் பிளவுபடும்.

ஆகவே, தீர்மானமொன்று இல்லாது இந்த விடயத்தை கையாள நினைக்கிறோம். என்றாலும் எமது நாட்டின் உள்ளக விவகாரங்கள், எவரும் தலையீடு செய்ய வேண்டாமென்பதுடன், எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்கிறோம் எனத் தெரிவிக்க விரும்புகிறோம் என்றார்.

(ம-03)

22ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01.01.1922
மறைவு 23.02.1999

ஸ்ரீமான்
சின்னையா நல்லையா
(6ஆம் வட்டாரம், மண்டைதீவு)

ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 21/3 A, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.
குடும்பத்தினர்

மணமகன் தேவை
யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த
1976 ஆம் ஆண்டு பிறந்த
குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை
புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை
பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு
070 640 5951
e-mail : engchelvam@gmail.com
(5641)

தவறிவிட்டது
பொன்னு கமலேந்திரன் ஆகிய எனது
சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள
அட்டை, ஏ ரி எம் அட்டை உட்பட
பேர்சுடன் சிறு தொகைப் பணமும் A9
வீதியில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கும்
பளைக்கும் இடையில் 19.02.2021 அன்று
தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட
தொலைபேசிக்கு தொடர்பு கொள்ளவும்.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்.)
077 899 5403
(C-1484)

பெண் கணக்காளர் தேவை
யாழ். நகரில் இயங்கும் தனியார்
நிறுவனத்திற்கு பெண் கணக்காளர்
உடனடியாகத் தேவை.
☎-076 561 7856
(C-1486)

காணி விற்பனைக்கு
செம்மணி வீதியில்
நாயன்மார்கட்டு கேணியடியில்
2 பரப்புக் காணி விற்பனைக்கு.
இரண்டு பரப்பாக பிரித்துக்
கொடுக்கப்படும்.
( ஒரு பரப்பின் விலை
5 இலட்சம். )
077 288 0152
077 505 8561
(5845)

வீடு விற்பனைக்கு
மானிப்பாயில் 2 1/2 பரப்புக்
காணியுடன் நல்ல நிலையில்
உள்ள வீடு விற்பனைக்கு
உண்டு.
( தரகர் தேவையில்லை. )
077 778 7545
(C-1485)

5ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர் தெய்வேந்திரன் பகீசன்
[ முன்னாள் பிரதேச அபிவிருத்தி வங்கி முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ]
இழப்பின் துயரம் இன்னும் வலித்துக்கொண்டேயிருக்கிறது.
அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு
யாழ்ப்பாணம் பிரதேச அபிவிருத்தி வங்கியிலும்
கிளிநொச்சி பிரதேச அபிவிருத்தி வங்கியிலும் 27.02.2021
சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு இரத்ததான முகாம்
நடைபெறவுள்ளது.

"தாரணி"
இமையாணன், உடுப்பிட்டி.
குடும்பத்தினர்
(5846)

சாவகச்சேரி நகராட்சி மன்றம்
அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் முன்னெடுக்கப்படும் பின்லா செயற்திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்படவிருக்கும் மீள்சுழற்சி நிலையத்திற்கு மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்களை சேகரித்து வழங்க விரும்புகின்ற நகராட்சி மன்றத்திற்குட்பட்ட பகுதியை வதிவிடமாக கொண்டவர்கள் தமது விபரங்களை சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் அலுவலக நாட்களில் எதிர்வரும் 26.02.2021 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யலாம் என்பதை அறியத்தருகின்றேன். மேலதிக விபரங்கள் நகராட்சி மன்ற அலுவலகத்தில் அல்லது 021 227 0806 தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இ. சிவமங்கை
தவிசாளர்
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.
20.02.2021
(C- 1482)

# இலங்கை விவகாரத்தில் சர்வதேசம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர்கள் கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் வன்முறைகளை முடிவிற்கு கொண்டுவருவதற்கு சர்வதேச சமூகம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய விவகாரங்களில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஐக்கிய நாடுகளின் முன்னாள் ஆணையாளர்கள் மற்றும் சுயாதீன நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**





ஐக்கிய நாடுகள் மனித உரிமையின் முன்னாள் ஆணையாளர்கள், கொலம்பியாவின் முன்னாள் ஜனாதிபதி யுவன் மனுவல் சன்டோஸ், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் பிரதி செயலாளர் ஜன் எலியசன் உட்பட 20 முன்னாள் நிபுணர்களும் சுயாதீன நிபுணர்களும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் கூறியுள்ளதாவது,

"ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை நீதி மற்றும் பொறுப்புக்கூறலில் நாடு முன்னேற்றத்தைக் காணவில்லை என்பதை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

மேலும், நிலையான நல்லிணக்கம் மற்றும் மீண்டும் மனித உரிமை மீறல்கள், மோதல்கள் இடம்பெறுதலை தடுப்பதற்கான முக்கியமான விடயமாக இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் அநீதிகளிற்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கானஉறுதியான சர்வதேச நடவடிக்கைகளைப் பரிந்துரைத்துள்ளது.


ஆகவே உறுப்பு நாடுகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்பட்டு, சர்வதேச நியாயாதிக்கத்தின் ஊடாக நீதிக்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு மனித உரிமை ஆணையாளர் விடுத்த வேண்டுகோளையே நாங்களும் விடுக்கின்றோம்.

இலங்கை தண்டனையின் பிடியிலிருந்து, விலக்களிப்பதை நிறுத்த மறுப்பதால் சர்வதேச வழிமுறைகள் ஊடாக பொறுப்புக்கூறலிற்கான வழிவகைகள் குறித்து ஆராயவேண்டும்.

இதேவேளை சர்வதேச குற்றங்களில் ஈடுபட்டனர் என்ற நம்பகத்தன்மை மிக்க விதத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக இலக்கு வைக்கப்பட்ட தடைகளை விதிக்க வேண்டும் என்ற மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரையை நாங்கள் ஆதரிக்கின்றோம்" என ஐக்கிய நாடுகளின் முன்னாள் ஆணையாளர்கள் மற்றும் சுயாதீன நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (நி-4)

# திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இலங்கைக்கு கொடுக்கும் எண்ணம் எதுவுமில்லை

## இந்தியா பதிலடி



(திருமலை)

திருகோணமலையிலுள்ள எண்ணெய் தாங்கிகளை மீண்டும் இலங்கைக்கு வழங்குவது தொடர்பாக எந்த இணக்கப்பாட்டையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் அது தொடர்பாக தற்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் இந்தியா தெரிவித்தது.

குறித்த எண்ணெய் தாங்கிகள் விரைவில் இலங்கைக்கு கிடைக்க உள்ளதாக மின் சக்தி அமைச்சரும் அமைச்சரவையின் இணைப் பேச்சாளருமான உதய கம்மன்பில அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இதன்மூலம் இந்த எண்ணெய் தாங்கிகளைப் பயன்படுத்தி திருகோணமலைக்கு அருகில் உள்ள கடலில் செல்லும் கப்பல்களுக்கு எரிபொருளை வழங்க சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் அவர் கூறியிருந்தார்.

2003ஆம்ஆண்டுஅன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் உடன்படிக்கை ஒன்றின் மூலம் எண்ணெய் தாங்கிகளை இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கு வழங்கியது. 2015 ஆம் ஆண்டு அவற்றைத் திரும்பப் பெற முயற்சித்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை.

இந்த நிலையிலேயே இந்திய அரசினை மேற்கோள் காட்டி இந்த தகவல் வெளியாகியுள்ளது. (நி-4)

# சாதாரண தரப் பரீட்சை மீள் திருத்த முடிவுகள் வெளியீடு

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் மீள் திருத்த முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் அவற்றை கல்வியமைச்சின் www.doenets.lk என்ற இணையத்திளத்தினூடாகச் சென்று பார்வையிடலாம்.

2019 ஆம்ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் மீள் திருத்தத்திற்காக 57,155 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பொத்துவில் முதல் பொலிகண்டி போராட்டத்தில் பங்குபற்றியமைக்காக பலரிடம் வாக்குமூலம் பதிவு

(யாழ்ப்பாணம்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தில் பங்குபற்றியமைக்காக பலரிடம் நேற்றையதினம் பொலிஸாரால் வாக்குமூலம் பெறப்பட்டது.

அந்த வகையில் யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன் போன்றவர்களிடமும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன், நானாட்டான் பிரதேச சபை தி.பரஞ்சோதி, பச்சிலைப் பள்ளி தவிசாளர் சு.சுரேன், உபதவிசாளர் மு.கஜன், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டது. (4)

# 'பின்லா' திட்டத்தை முன்னெடுக்க மக்கள் விபரங்களை பதியவும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில்முன்னெடுக்கப்படும்பின்லா செயற்றிட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படவிருக்கும் மீள் சுழற்சி நிலையத்திற்கு மீள் சுழற்சிக்குட்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்களை சேகரித்து வழங்க விரும்புகின்ற நகராட்சி மன்றத்திற்குட்பட்ட பகுதியை வதிவிடமாகக் கொண்டவர்கள் தமது விபரங்களை சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் அலுவலக நாட்களில் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யலாம்.

மேலதிக விபரங்கள் நகராட்சி மன்ற அலுவலகத்தில் அல்லது 021 227 0806 என்ற தொலைபேசிமூலம்பெற்றுக்கொள்ள முடியும் என சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் இ. சிவமங்கை அறிவித்துள்ளார்.(4)



# ஒரு பில்லியன் இழப்பீடு கோரி நீதிமன்றம் சென்ற றிசாத்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீரவிடம் ஒரு பில்லியன் ரூபாய் இழப்பீடு கோரி முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன், வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜயந்த சமரவீர வெளியிட்ட கருத்தால் தமக்கு சிரமங்களும்கடும் அசௌகரியங்களும் ஏற்பட்டுள்ளதாக றிசாத் தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு களுத்துறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜயந்த சமரவீர, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தான் சம்பந்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தினார் எனவும் இதன் காரணமாக தனக்கு ஒரு பில்லியன் ரூபாய் இழப்பீட்டை வழங்க வேண்டுமெனவும் றிசாத் பதியுதீன் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளார்.(நி-4)

# ஆஹா ஓஹோ... ஓசாகா

## ◆ஆஸி ஓபனில் அபாரம் ◆செரீனா ஏமாற்றம்



ஓசாகா

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் அமெரிக்க வீராங்கனை செரினா வில்லியம்ஸ் அதிர்ச்சி தோல்வியடைந்தார். இறுதிப் போட்டியில் ஜப்பானின் ஓசாகா, அமெரிக்காவின் ஜெனிபர் பிராடி மோதுகின்றனர். ஆண்கள் ஒற்றையர் இறுதிக்கு ஜோகோவிச் முன்னேறினார்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடப்பு ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் உலகின் 'நம்பர் 11' அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், 'நம்பர் 3' ஜப்பானின் நவோமி ஒசாகா மோதினர்.

இதில் ஏமாற்றிய செரினா 3-6, 4-6 என்ற நேர் செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார். இதன்மூலம் இவர், கிராண்ட்ஸ்லாம் ஒற்றையரில் அதிக பட்டம் வென்ற வீராங்கனைகள் பட்டியலில் முதலிடத்தை அவுஸ்திரேலிய ஜாம்பவான் மார்கரேட் கோர்ட் (24 பட்டம்) உடன் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை நழுவவிட்டார். செரினா, 23 பட்டம் வென்றுள்ளார்.

ஜப்பானின் ஒசாகா, 2ஆவது முறையாக அவுஸ்திரேலிய ஓபனில் இறுதிக்கு தகுதி பெற்றார். கடந்த 2019இல் இறுதிக்கு முன்னேறிய இவர், செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவாவை தோற்கடித்து முதன் முறையாக இத்தொடரில் கிண்ணம் வென்றார்.

தவிர இது, இவரது 4ஆவது கிராண்ட்ஸ்லாம் பைனல்.

**ஓசாகா - பிராடி மோதல்**

பெண்கள் ஒற்றையரில் இன்று நடக்கவுள்ள இறுதியில் உலகின் 'நம்பர் 3' ஜப்பானின் நவோமி ஒசாகா, 24ஆவது இடத்தில் உள்ள அமெரிக்காவின் ஜெனிபர் பிராடி மோதுகின்றனர்.

இதில் ஒசாகா வெற்றி பெறும் பட்சத்தில், அவுஸ்திரேலிய ஓபனில் 2ஆவது கிராண்ட்ஸ்லாம் அரங்கில் 4ஆவது பட்டத்தை கைப்பற்றலாம். பிராடி வென்றால், கிராண்ட்ஸ்லாம் அரங்கில் தனது முதல் பட்டத்தை ருசிக்கலாம்.

இரண்டு முறை (2018, 2020) யு.எஸ்., ஓபனில் இறுதிவரை சென்று கிண்ணம் வென்றிருந்தார்.

மற்றொரு அரையிறுதியில் அமெரிக்காவின் ஜெனிபர் பிராடி, செக்குடியரசின் கரோலினா முசோவா மோதினர். இதில் அபாரமாக ஆடிய பிராடி 6-4, 3-6, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று முதன் முறையாக கிராண்ட் ஸ்லாம் இறுதிக்கு முன்னேறினார்.



**கராட்சேவ் உடனான அரையிறுதி ஆட்டத்தில் ஜோகோவிச்**

**இறுதியில் ஜோகோவிச்**

ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் உலகின் 'நம்பர்-1' செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ரஷ்யாவின் அஸ்லான் கராட்சேவ் மோதினர்.

அசத்தலாக ஆடிய 'நடப்பு சம்பியன்' ஜோகோவிச் 6-3, 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இத்தொடரில் 9ஆவது முறையாக (2008, 2011-13, 2015-16, 2019-21) இறுதிக்கு முன்னேறினார்.

முன்னதாக விளையாடிய 8 இறுதிப் போட்டியிலும் வெற்றி பெற்று கிண்ணம் வென்றிருந்தார். தவிர இவர், 28ஆவது முறையாக கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

# மின்னினார் மெட்வதேவ்

## கிண்ணம் வருமா கைவசம்



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் இறுதிக்கு ரஷ்யாவின் மெட்வெடேவ் முன்னேறினார். அரையிறுதியில் கிரீஸ் வீரர் சிட்சிபாசை தோற்கடித்தார்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடப்பு ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் நடக்கிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் உலகின் 'நம்பர் - 4' ரஷ்யாவின் டேனில் மெட்வெடேவ், 6வது இடத்தில் உள்ள கிரீசின் ஸ்டைபானஸ் சிட்சிபாஸ் மோதினர்.

முதலிரண்டு செட்களை 6-4, 6-2 என மிகச் சுலபமாக கைப்பற்றிய மெட்வெடேவ், 3ஆவது செட்டை 7-5 என போராடி வென்றார். இரண்டு மணி நேரம், 9 நிமிடம் நீடித்த போட்டியில் மெட்வெடேவ் 6-4, 6-2, 7-5 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். இதன் மூலம் இவர், இத்தொடரில் முதன் முறையாகவும், கிராண்ட்ஸ்லாம் அரங்கில் 2ஆவது முறையாகவும் இறுதிக்குள் நுழைந்தார்.

கடந்த 2019 யு.எஸ்., ஓபனில் இறுதி வரை சென்ற மெட்வெ டேவ், ஸ்பெயினின் ரபெல் நடாலிடம் தோல்வி யடைந்து 2வது இடம் பிடித்தார். நாளை நடக்கவுள்ள இறுதியில் மெட்வெ டேவ், 'நடப்பு சம்பியன்' மற்றும் உலகின் 'நம்பர் 1' செர்பியாவின் ஜோகோவிச்சை சந்திக்கிறார்.

# அல்லு காட்டும் ஆகமதாபாத்



நான்கு 'டிரெசிங் ரூம்', 11 ஆடுகளங்கள், எல்.இ.டி., விளக்குகள் என களை கட்டுகிறது ஆமதாபாத் மைதானம்.

குஜராத்தின் ஆமதாபாத்தில் மொடீரா என்ற இடத்தில் உள்ளது சர்தார் படேல் மைதா னம். கடந்த 2014க்குப் பின் மைதானம் முற்றிலும் மாற்றி அமைக்கப் பட்டது.

63 ஏக்கரில், உலகின் மிகப் பெரிய கிரிக்கெட் மைதானமாக உருவெடுத்துள்ளது. மொத்தம் 1,10,000 பேர் வரை அமர்ந்து போட்டியை கண்டு ரசிக்கலாம்.

சமீபத்தில், சையது முஷ்தாக் அலி 'ரி20' தொடரின் 'நொக் அவுட்' சுற்று போட்டிகள் இங்கு நடந்தன.

அடுத்து இந்தியா, இங்கிலாந்து மோதும் 3, 4வது டெஸ்ட் மற்றும் ஐந்து 'ரி20' போட்டிகள் இங்கு நடக்கவுள்ளன. மூன்றாவது டெஸ்ட் வரும் 24ஆம் திகதி, பகலிரவு போட்டியாக மதியம் 2.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

போட்டிகளை காண 50 சதவீத ரசிகர்களுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது. இதற்கான டிக்கெட்டுகள் முழுவதும் விற்றுத் தீர்ந்து விட்டன. இதனால் 55,000 பேர் மைதானத்தில் திரள காத்திருக்கின்றனர்.

**மைதானம் எப்படி?**

உலகில் முதன் முறையாக மைதானத்தில் 11 ஆடுகளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வீரர்களுக்காக முதன் முறையாக 'ஜிம்' வசதியுடன் கூடிய நான்கு 'டிரசிங் ரூம்' கட்டப்பட்டுள்ளன. மின்னொளிக்காக 'எல்.இ.டி.,' விளக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இரவு நேரத்தில் நிழல் விழாது. பந்தை சரியாக கணித்து 'கேட்ச்' செய்யலாம்.

மழை வந்தாலும் விரைவில் போட்டிக்கு தயாராகும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இரண்டு பயிற்சி மைதானங்கள் உள்ளன. மைதான பராமரிப்புக்கு மட்டும் ரூ. 2 கோடி செலவில் பொருட்கள் வாங்கப்பட்டுள்ளன.

# புலிகள் மீதான தடைக்கு எதிரான வழக்கில் அவகாசம் கோரியது பிரித்தானிய அரசு

(லண்டன்)

பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடை சட்டவிரோதம் எனக் கூறி தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கான மேல்முறையீட்டு ஆணையத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தீர்ப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்த வழக்கில் தமது தரப்பு நிலைப்பாட்டை அறிவிக்க பிரித்தானிய அரசு 90 நாட்கள் அவகாசம் கோரியுள்ளது.

அத்துடன், விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்பில் தம்மிடம் புதிய ஆதாரங்கள் இருப்பதாக தமது வாதுரையில் அரசு தரப்பு தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளை தடைநீக்கம் செய்யும் ஆணையை, உள்துறையமைச்சர் பாராளுமன்றத்தில் முன்வைப்பது மட்டுமே உரிய அடுத்த நடவடிக்கையாக அமைய வேண்டுமென நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கருத்து வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் பிரித்தானிய அரசாங்கத்துக்கு 90 நாட்கள் அவகாசமாக வழங்கியுள்ளமையானது சட்ட ஆட்சிக்கும், நீதிக்கும் முரணானது என தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இது தொடர்பில் மேன்முறையீட்டு பத்திரங்களை தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கான மேல்முறையீட்டு ஆணையத்திடம் சமர்ப்பித்துள்ளது.

தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கான மேல்முறையீட்டு ஆணையத்திடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தொடுத்திருந்த சட்டப்போராட்டத்தின் முதல்கள வெற்றியாக, பயங்கரவாத தடைப்பட்டியலில் விடுதலைப் புலிகளை தொடர்ந்தும் வைத்திருக்கும் பிரித்தானிய உள்துறையமைச்சரின் செயல் சட்டமுறைமைக்கு முரணானது என ஒக்டோபர் 21 ஆம் திகதி ஆணையம் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தது.

முதல் தீர்ப்பு தொடர்பில் தீர்ப்பு வெளிவந்த அடுத்த 28 நாட்களுக்குள் எழுத்துபூர்வமாக அறிக்கையை பிரித்தானிய அரசு ஆணையத்திடம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற நிலையில், தமிழீழ விடுதலைப்புலிகளை தடைநீக்கம் செய்யும் ஆணையை, உள்துறையமைச்சர் பாராளுமன்றத்தில் முன்வைப்பது மட்டுமே உரிய அடுத்த நடவடிக்கையாக அமைய வேண்டுமென நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது வாதுரையில் தெரிவித்திருந்தது.

ஆனால் தமக்கு 90 நாட்கள் அவகாசம் தருமாறு ஆணையத்திடம் பிரித்தானிய அரச தரப்பு, கோரியிருந்ததோடு, தடை தொடர்பில் தம்மிடம் புதிய ஆதாரங்கள் இருப்பதாக தனது வாதுரையில் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் பாராளுமன்றம் நோக்கிய சட்டமுறைமையை நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளிவந்த ஆணையத்தின் இரண்டாம் கட்ட தீர்ப்பானது வெட்டிவிட்டதாகக் கருத வேண்டியுள்ளதென நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது பாராளுமன்றத்தின் இறைமைக்கு முரணாக அமைவதோடு, இது தொடர்பில் பிரித்தானிய பாராளுமன்ற விவாதம் ஒன்றை நடத்த வேண்டும்என கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த விவகாரம் தனியே விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீக்குவதாக மட்டுமல்லாமல், சட்ட ஆட்சி, பாராளுமன்ற இறைமை தொடர்பாக இடம்பெற வேண்டும் எனவும் தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இந்த விவாகரத்தினை அரசியலாக்கம் செய்வது தொடர்பில் வரும் வாரங்களில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை பிரித்தானிய உள்துறை அமைச்சுக்கு கொடுக்கப்பட்ட 90 நாட்கள் காலத்துக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் எந்தவிதான பயங்கரவாத நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்ற வல்லுநர்களின் அறிக்கைளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சமர்ப்பிக்க இருப்பதோடு, உலகத் தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை உள்துறை அமைச்சருக்கு அழுத்தம் கொடுக்கின்ற உலகளாவிய செயற்பாடொன்றினை தொடக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## முதல் தடவை தடுப்பூசி பெற்றுக் கொண்டோர் கட்டாயம் இரண்டாவது தடுப்பூசியையும் பெறவேண்டும்



(கொழும்பு)

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா முதலாவது தடுப்பூசியினை பெற்றுக்கொண்டவர்கள் இரண்டாவது ஊசியையும் கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

முதலாவது தடுப்பூசியினை ஏற்றியதன் பின்னர் 10 முதல் 12 வாரங்களுக்கு இடையில் இரண்டாவது தடுப்பூசியினையும் செலுத்திக்கொள்ள வேண்டும்.

எனவே இரண்டாவது கொவிட்-19 தடுப்பூசியினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (நி-4)



பாகிஸ்தானின் கராச்சியில் இடம்பெற்ற "அமான் 2021" சர்வதேச கடற்படை கூட்டுப் பயிற்சியில் இலங்கை கடற்படையின் "கஜபாகு" கப்பல் பங்கேற்றது. இம்மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற இந்த கூட்டுப்பயிற்சியில் கலந்து கொண்ட 45 நாடுகளின் கப்பல்களில் இலங்கை கடற்படையின் "கஜபாகு" கப்பலும் ஒன்றாகும்.


**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF MEDICINE**

**Inauguration of Academic Programme**

The Academic Programme for the New Batch (2019 A/L) of Medical Students will commence on **Monday, 15th March 2021**. An Inauguration Programme will be held on 15th March 2021 at 8.30 am in the Hoover Auditorium, Faculty of Medicine. Only enrolled students will be allowed inside the Faculty of Medicine, University of Jaffna.

***This will be implemented strictly due to the prevailing COVID crisis.***

**Address : Faculty of Medicine,**
**University of Jaffna**
**Adiyapatham Road,**
**Kokuvil, Jaffna.**

- Students those who are outside of the Jaffna Peninsula have to report on 5th of March 2021.
- The hostel accommodation for those students will be provided since 5th of March 2021

**Registrar**
**University of Jaffna**

(C-148)


## லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக நுகர்வோருக்கு சலுகை விலையில் பொருட்கள்

(கொழும்பு)

லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக, நுகர்வோருக்கு சலுகை விலையில் பொருட்களை வழங்கும் வகையிலான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலகம் மற்றும் சமுர்த்தி திணைக்களம் என்பன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

முதற்கட்டமாக கொழும்பு,களுத்துறை, கம்பஹா மாவட்டங்களை உள்ளடக்கி இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. தெரிவு செய்யப்பட்ட 75 சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக சலுகை விலையில் காய்கறிகளை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## டெங்கு நுளம்பை அழிக்க இரு ட்ரோன்கள்



(கொழும்பு)

மேல்மாகாணத்திற்குள் டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்கும் தேசிய உந்துதலை ஆதரிக்கும் முயற்சியில் இலங்கை விமானப்படை மேற்கு மாகாண ஆளுநரிடமிருந்து இரண்டு ட்ரோன் கமராக்களைப் பெற்றது. கொழும்பில் அமைந்துள்ள இலங்கை விமானப்படையின் தலைமை அலுவலகத்தில் வைத்து விமானப்படைத் தளபதி ஏயர் மார்ஷல் சுதர்ஷனா பதிரானா இந்த நன்கொடையினை பெற்றார்.

டெங்கு நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யும் இடங்களை கண்டுபிடிப்பதற்கும் இனப்பெருக்கம் செய்யக் கூடிய பகுதிகளில் திரவங்களை வான்வழியூடாக தெளிப்பதைக் கண்காணிப்பதற்கும் இந்த ட்ரோன்கள் நிறுத்தப்படும்என்று விமானப் படை செய்தி தொடர்பாளர் தெரிவித்தார். (நி-4)

# தமிழுக்கு முன்னுரிமை வழங்கும் செயற்பாட்டில் யாழ்.மாநகரசபை செயற்பட்டதுபோன்று ஏனையோரும் செயற்பட வேண்டும்

## சைவமகாசபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**13 ஆம் திருத்தத்தின் படி வட-கிழக்கு மாகாணங்களில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டி யது கட்டா யமானதாகும். மாகாண சபைக்கு உட்பட்ட உள்ளூராட்சி சபைகள் இந்த விடயத்தில் இனியும் மெத்தனமாகச் செயற்படக் கூடாது**

இவ்வருட ஆரம்பத்தில்அனைத்து தமிழ் உள்ளூராட்சி சபைகளில் பெயர்ப்பலகைகளில் தமிழுக்கு முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சைவமகாசபை பகிரங்க வேண்டு கோள் விடுத்திருந்தது.

முதலில் செயலில் இறங்கிய மாநகர சபையைப் பாராட்டுவதுடன் ஏனைய உள்ளூராட்சி சபைகளும் பின்பற்ற வேண்டுகின்றோம் என அகில இலங்கை சைவமகா சபையின் பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் நேற்று முன்தினம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முதல் அடி எடுத்து வைத்துள்ள மாநகர முதல்வருக்கும் உறுப்பினர்களுக்கும் வாழ்த்துக்கள்.

இதேவேளை யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாகத் தொடங்கும் வியாபார நிலையம் மற்றும்ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் வியாபார நிலையங்களில் தாமாகவே விரும்பி தங்களுடைய விளம்பரப் பதாகைகளில் தமிழுக்கு முன்னுரிமையளித்தால் 50 வீதம் வியாபாரக்கழிவு வழங் கப்படும் என யாழ்.மாநகர சபையில் ஏகமனதாகத் தீரமானம் நிறைவேற்றப்பட்டது என தெரிவித்தார். (4-6-18)

## திருடர் தொல்லை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி பகுதியில் கடந்த சில நாட்களாக அதிகளவான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக அப்பிரதேச மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

பகல்-இரவு நேரங்களில் மக்கள் நடமாட்டம் குறைந்த வேளையில் வீட்டு வளவினுள் இறங்கி பொருட்களை களவாடிச் செல்கின்றனர்.

எனவே இதற்குரிய நடவடிக்கையை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (4-6)

## நல்லூரில் நாளை தாய்மொழி தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கலைபண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் உலக தாய்மொழி தினம்-2021 நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அருணாச்சலம் சண்முகதாஸ், பேராசிரியை கலாநிதி அ.மனோன் மணி சண்முகதாஸ் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6-18)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென்.மேரிஸ் இளைஞர் கழகத்தால் இரத்த தான முகாம் நாளை 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாவாந்துறைபுனிதபரலோக அன்னை ஆலய முன்றலில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

குருதிக் கொடையாளர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வருமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது. (4-6)



தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் தேசிய தமிழர் சக்தி ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு தென்னங்கன்றுகளை வழங்கும் செயற்றிட்டத்தினை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் நேற்று முன்தினம் யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்:-சிவசாந்தன்)

## வைத்தியசாலையை தரமுயர்த்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி மற்றும் பளை பிரதேச மக்களுக்கு வைத்திய சேவையாற்றி வரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை தரமுயர்த்துமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் குறித்த முன்மொழிவு வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப் பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை ஆரம்பித்து வைத்தியசாலையை தரமுயர்த்த வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப் பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவினை ஆரம்பிக்கும் பட்சத்தில் பளை தொடக்கம் நாவற்குழி பகுதி வரையான பிரதேசங்களில் இடம்பெறுகின்ற விபத்துக்களில் படுகாயமடைபவர்களை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டிய தேவைப்பாடு நிலவாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது விபத்துக்களில் காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோர் பெரும்பாலும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டிற்கான பதிவு செய்யப்பட்ட கலை இலக்கிய மன்றங்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள், வடக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள், வடக்கு மாகாண கலைக் குரிசில் விருது, வடக்கு மாகாண இளைஞர் விருது, வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசு, வடக்கு மாகாண நூற்கொள்வனவு, நடுவர் தெரிவு ஆகிய வேலைத்திட்டங்களிற்கு பொருத்தமான பயனாளிகளை தெரிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

இவ் வேலைத்திட்டங்களில் இணைந்து பயன்பெற விரும்புபவர்கள் பிரதேச செயலகத்திற்கு அலுவலக நேரத்தில் வருகை தந்து உரிய விபரங்களுடன் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இவை யாவற்றிக்குமான இறுதித்திகதி 31.03.2021 ஆகும் எமது பிரதேச விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை 22.03.2021 ஆம் திகதிக்கு முன்பதாக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கவும். மேலும் கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் 2021 இன் கீழ் வழங்கப் படவுள்ள கலைமன்ற அபிவிருத்தி நிதி, கலைஞர் ஊக்குவிப்பு நிதி என்பன தொடர்பான விடயங்களிற்கும் பொருத்தமானவர்கள் தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (4)

## தற்போதைய சூழ்நிலையில் பட்டமளிப்பு விழா நடத்துவது சிக்கல் எனின் பிற்போட முடியும்

### மருத்துவர் கேதீஸ்வரன் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவை இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துவதில் சிரமங்கள் ஏதாவது இருப்பின் நிகழ்வைப் பிற்போட்டு, கொவிட்-19 நிலைமைகள் சீரடைந்த பின் பிறிதொரு நாளில் நடத்தலாம் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர் வரும் 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில், பட்டமளிப்பு நிகழ்வை கடுமையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துமாறு கோரி, அந்நடைமுறைகளைப் பட்டியலிட்டு யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தில் பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றவுள்ளவர்களுக்கான பல்வேறு சுகாதார நடைமுறைகள் அடங்கிய அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.



மேலும் வடக்கு மாகாண ஆளுநர், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் உட்பட 11 பேருக்கு அந்தக் கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (4-6-33)

# ஊடகவியலாளருக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்க கோரிக்கை

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் ஜகத் பீ விஜேவீரவினால் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எழுத்பூர்வமாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் பொதுமக்களுடன் தொடர்புபட்டுள்ளதுடன் நாட்டின் பல்வேறு பாகங்களுக்கு பயணம் செய்கின்ற நிலையில் அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்குவது அவசியம் எனவும் இதன் போது வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி-4)

# அடையாள அட்டை கிடைக்காதவிடத்து பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

## ஆட்பதிவுத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

இந்த முறை க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் தமக்கான தேசிய அடையாள அட்டைகளை இன்னும் பெறவில்லையென்றால், பாடசாலை அமைந்துள்ள பிரதேச செயலகத்தில் அது குறித்து விசாரிக்குமாறு ஆட்பதிவு திணைக்களம் அதிபர்களுக்கு அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுநோய் காரணமாக கடந்த காலங்களில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த போது மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகளை, சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்திருந்தார்.

அதற்கமைவாக பாடசாலை அதிபர்கள் பிரதேச செயலகத்திற்குச் சென்று மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையர் நாயகம் வியானி குணதிலக கேட்டுக்கொண்டார். சில மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக ஆட்பதிவு திணைக்களம் வழங்கிய கடிதமும் க.பொ.த. சாதாரண தர தேர்வுக்கு தோற்றுவதற்கு செல்லுபடியாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 43 செவ் 1 சூரி 3 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L, சொந்த வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11472 | பிறப்பு: 1977 இந்து நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 38 1/4 செவ் 6 சூரி 7 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, ஆசிரியை நிரந்தரம்.<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் 1974, 1975, 1976 பிறந்தவர்கள் வெளிநாடு, உள்நாடு.<br>தொ.இ: G/1903 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 12 செவ் 11 சூரி 10இல் உயரம்:162cm<br>தகைமை/தொழில்: BSC (Hons), ஆசிரியர் நிரந்தரம்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11473 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3 ஆம் பாதம்<br>கி.பா: 15 செவ் 6 சூரி 5 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ., வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர் நிரந்தரம்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் க.பொ.த.உ. அல்லது அதற்கு மேல் இந்து பக்தர் அல்லது ஆசாரி வெளிநாடு பொருத்தம் இருந்தால் பார்க்கலாம்<br>தொ.இ: G/1918 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 12 செவ் சூரி உயரம்: 5.3<br>தகைமை/தொழில்: B.A (Hons) PGDE ஆசிரியர் நிரந்தரம்<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர் / அரச உத்தியோகம், உள்நாடு மட்டும்.<br>தொ.இ: B/11474 | பிறப்பு: 1972 இந்து நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 20 செவ் 6 சூரி 4 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ., கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நிரந்தரம்<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில், உள்நாடு மட்டும்.<br>தொ.இ: G/1921 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2 ஆம் பாதம்<br>கி.பா: செவ் 3 சூரி 4 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ, சொந்த வியாபாரம் (Food City கிளிநொச்சி)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண், அரச உத்தியோகம். வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/11475 | பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 13' செவ் 11 சூரி 12 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.Sc.I.T (Hons), Information Technology, தொழில் -Q.E.A வெளிநாட்டு நிறுவனம்<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant,A.O. வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/1922 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


# யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் 15.03.2021 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. முழுநேரமாக மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்.
2. இந்நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனை சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

மாதமொன்றிற்று ரூபா 85,000 (**EPF, ETF** கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக).

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் "ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி-01.03.2021**

(C-1479)

**ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

## 2/1 சீக்காய் ஒழுங்கை, வட்டாரம்-06

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 06 சீக்காய் ஒழுங்கையிலுள்ள இல: 2/1 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் S.சின்னத்தம்பி என்றே காணப்படுகிறது.

பெயர் மற்றத்திற்குட்படும் ஆதனத்திற்கு நரசிங்கம் தம்பிராசா கைம்பெண் சொர்னலட்சுமி ஆகியவர் தானே ஆட்சிப்படி உரியவர் என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் 5089/18.08.1992 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார். குறித்த உறுதி யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் E676/12 எனும் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தம்பிராசா செல்வராசா பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5092/20.08.1992 ஆம் இலக்க உறுதியால் குறித்த நரசிங்கம் தம்பிராசா கைம்பெண் சொர்னலட்சுமி ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

நாகலிங்கம் செல்வரத்தினமும் பெண் புனிதவதியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12181/01.07.2020 ஆம் இலக்க உறுதியால் குறித்த தம்பிராசா செல்வராசாவும் பெண் நீலாயதாட்சியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவர்களானார்கள்.

குறித்த நாகலிங்கம் செல்வரத்தினமும் பெண் புனிதவதியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவ் ஆத்னப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதாவிடத்து குறித்த ஆதனமானது நாகலிங்கம் செல்வரத்தினம் பெண் புனிதவதியும் ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(C/1469)

# 35 மில்லியன் ரூபாய் செலவில் அம்பலப்பெருமாள் குளம் புனரமைப்பு

(அக்கராயன்)

**முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம் புனரமைப்புப் பணிகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 35 மில்லியன் ரூபாய் நிதி செலவில் இடம்பெறவுள்ளன.**

கடந்த பெருமழையின் போது குளச் சூழலில் 400 மில்லிமீற்றர் வரையான மழை வீழ்ச்சி இடம் பெற்றதன் காரணமாக குளத்தின் அணைக்கட்டிற்கு ஆபத்து ஏற்பட்டது.

நீர்ப்பாசனத் திணைக்களமும் விவசாயிகளும் இணைந்து மண் மூடைகள் அணைக்கட்டிற்கு அடுக்கி குளம் உடைப்பெடுக்காமல் பாதுகாத்தனர்.

இந்நிலையில் மேற்படி நிதியில் குளத்தின் அணைக்கட்டிற்கான புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளன.

கடந்த பத்தாண்டுகளில் இக் குளத்தில் முழுமையான புனரமைப்பு வேலைத் திட்டங்கள் இடம் பெறாத நிலையில் தற்போது நீர்ப்பாசனத் திணைக்களம் புனரமைப்பிற்கான வேலைகளை முன்னெடுத்துள்ளது.



சிறுபோக நெற்செய்கையினை விரைவுபடுத்துமாறும் விவசாயிகளிடம் நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

முல்லைதீவு மாவட்டத்தில் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவில் முக்கிய குளங்களில் ஒன்றாக அம்பலப்பெருமாள் குளம் காணப்படுகின்றது.

இக்குளத்தின் கீழ் 600 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6-350)

# தாய் மொழி நாள் நிகழ்வுகள் நாளை

(அக்கராயன்)


கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் உலகத் தாய்மொழி நாள் நிகழ்வு நாளை 21 ஆம் ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் தமிழ் சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது.

தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மருத்துவ கலாநிதி மா.ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தமிழ்த் தாய் வாழ்த்து, தமிழ் வளர்த்த சான்றோருக்கு மாலை அணிவித்தல் ஆகியவை நடைபெறவுள்ளன.

நன்றியுரையைத் தமிழ் சங்கத்தின் பொதுச் செயலாளர் வே.தபேந்திரன் வழங்க உள்ளார். (4-6-350)




# கால்நடை வளர்ப்பாளர்களின் பிரச்சினை தொடர்பில் அபிவிருத்திக்குழு தலைவர் ஆராய்வு



(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளில் குளத்தின் அலைகரைப் பகுதிகளை அத்துமீறி வேலி அமைத்துள்ள குளங்களைப் பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமாகிய கு.திலீபன் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

கால்நடைகள் நீர் குடிப்பதற்காகவும் மேய்ச்சல் தரையாகவும் பயன்படுகின்ற குளத்தின் அலைகரை பகுதிகளை தனியார் அத்துமீறி வேலி அடைத்து வைத்திருப்பதாகவும் இதனால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை இல்லாதும் போயுள்ளது.

இதன் காரணமாக தங்கது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்களினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாகவே பாராளுமன்ற உறுப்பினர் நேரில் சென்று பார்வையிட்டார்.

குறிப்பாக வவுனியா பத்தினியார் மகிழங்குளம், ஒயார்சின்னக்குளம், கதிர்காம சின்னக்குளம் ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதன்போது கால்நடை வளர்ப்பாளர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததோடு இப்பிரச்சினை தொடர்பாக உரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு விரைவாக தீர்த்துத் தருவதாக கு.திலீபன் கால்நடை வளர்ப்பாளர்களிடம் தெரிவித்தார். (4-6-299)

# கிளிநொச்சியில் இன்று தீச்சட்டிப் பேரணி

(முறிகண்டி)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நீதிகோரி கிளிநொச்சியில் இன்று தீச்சட்டிப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி அவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 4 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் குறித்த தீச்சட்டிப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பேரணி தொடர்பில் சங்கத்தின் தலைவி கனகரஞ்சினி தெரிவிக்கையில்,

உண்மைக்கும் நீதிக்குமான குறித்த போராட்டம் சர்வதேசத்தின் ஊடாக நீதியைப் பெற்றுக் கொள்வதற்காக ஆரம்பித்துள்ளோம்.

எங்களுடைய உறவுகள் எமக்கு கிடைக்கும் வரையும், அவர்களுக்கான நீதி கிடைக்கும் வரையிலும் குறித்த போராட்டத்தை கைவிட மாட்டோம்.

இன்று அனைத்து தமிழ் உறவுகளும் எமக்கு பலம் சேர்க்க வேண்டும்.

இந்தத் தீச்சட்டி பேரணியானது கிளிநொச்சி பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலினை சென்றடையும்.

இந்த போராட்டமானது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இடம்பெறவுள்ள நிலையில் எமக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத் தருவதற்காக சர்வதேசத்தில் உள்ள அனைவரினது நெஞ்சங்களிலும் பதியப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-6-100)

# போதைப் பொருட்கள் எரியூட்டி அழிப்பு

(வவுனியா)

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இ.கண்ணன் முன்னிலையில் ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு அண்மையாகவுள்ள வெற்றுக் காணியில் நேற்று வெள்ளிக்கிழமை கஞ்சா போதைப் பொருள் எரியூட்டி அழிக்கப்பட்டது.

முடிவடைந்த வழக்குகளில் காணப்படும் சான்றுப் பொருட்களான சுமார் 150 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளினை அழிக்க மன்று உத்தரவிட்ட நிலையில் வவுனியா மேல் நீதிமன்றப் பதிவாளர் திருமதி. மீரா வடிவேற்கரசனின் ஏற்பாட்டில் அவை எரியூட்டி அழிக்கப்பட்டன. (4-6-33)



யாழ்.இந்திய துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்டார். மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் எம்.கிருபாசுதன் ஆகியோருடன் இந்திய அரசாங்கத்தினால் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னேற்றத்தினை நோக்கிப்பயணிப்பதற்கு வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் கலந்துரையாடினார். (படங்கள்:-தவசீலன்,யதுபாஸ்கரன்)

# இராசிபலன்

20.02.2021
மாசி 08, சனிக்கிழமை
அட்டமி பிற்பகல் 12.26 மணிவரை
ரோகினி முழுவதும்
சுபநேரம் 3.32-5.02 மணிவரை
இராகுகாலம் 9.32-11.02 மணிவரை
சந்திராஷ்டமம் விசாகம்
உலக சமூக நீதி தினம்


மேஷம்

யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் பெறுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், வாக்கு மேன்மையுண்டு.


ரிஷபம்

போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கனவு பலிதமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


மிதுனம்

தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம்.


கடகம்

விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.


சிம்மம்

வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


கன்னி

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.


துலாம்

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், அடுத்தவர் விவகாரத்தில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.


விருச்சிகம்

நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சியடைவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.


தனுசு

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலம் சீராகும், காரிய அனுகூலமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மகரம்

அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.


கும்பம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், போசன சுகமுண்டு.


மீனம்

நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு:

திறமையும் நம்பிக்கையும் வெல்ல முடியாத படை

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தக் கோரி வலுக்கும் போராட்டங்கள்

(ஜெனீவா)

**இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தக் கோரும் கவனயீர்ப்பு போராட்டங்கள் புலம்பெயர் நாடுகளில் கூர்மையடைந்து வருகின்றன.**



தமிழின அழிப்புக்கான பரிகார நீதியைக் கோருவதோடு, இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலுக்கு ஸ்ரீலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்று தமிழர்கள் தொடர்ச்சியாக கோரி வருகின்றனர்.

குறிப்பாக இலங்கையின் நிலைமைகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும் என்ற ஐ.நா. ஆணையாளரது முக்கிய பரிந்துரை தமிழர்களின் கோரிக்கைக்கு வலுச்சேர்த்திருந்ததோடு, தாயகத்தில் இடம்பெற்றிருந்த பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான மக்கள் எழுச்சிப் போராட்டமும் அதற்கு உரமூட்டியிருந்தது.

இந்நிலையில் புலம்பெயர் தேசங்களிலும் இக்கோரிக்கை வலிமைபெறும் வகையில் கவனயீர்ப்புப் போராட்டங்கள், கையெழுத்து இயக்கங்கள் இடம்பெற்று வருகின்றன.

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் அமைந்துள்ள நெதர்லாந்தின் கெக் நகரில் இருந்து ஜெனிவா ஐ.நா.மனித உரிமைச்சபை நோக்கிய நீதிக்கான ஈருருளிப் பயணம் தொடர்ந்து நகர்ந்து வருகின்றது. தலைநகர் பாரிஸ், புறநகர சபை வளாகங்களில் இன அழிப்பினை வெளிப்படுத்தும் ஒளிப்படக் காட்சிப்படுத்தல்களும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை கனேடிய தலைநகர் ஒட்டாவா அரச மையம் நோக்கி நீதிக்கான வாகன பேரணியொன்றும் கடந்த வாரம் இடம்பெற்றது.

குறிப்பாக இலங்கை தொடர்பில் ஐ.நா.மனித உரிமைச் சபையில் தீர்மான வரைவினைக் கொண்டு வருகின்ற முதன்மை நாடுகளை நோக்கி அழுத்தம் கொடுக்கும் வகையில் இணையவழி கையெழுத்து போராட்டங்களும் கனடா, ஜேர்மன் ஆகிய நாடுகளில் கூர்மைபெற்றுள்ளன.

புதிய தீர்மான வரைபானது இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்ற கோரிக்கையினை பிரதானமாக இக்கையெழுத்து இயக்கங்கள் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆபத்துள்ள பகுதி மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதில் முன்னுரிமை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த அதிக ஆபத்துள்ள பகுதிகளில் வாழும் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி போடுவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

வைரஸ் அதிகம் பரவும் நகரங்கள், கிராமங்கள் அல்லது கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டு, அந்தப் பகுதிகளில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு தடுப் பூசி போடும் நடவடிக்கை அடு த்த வாரம் ஆரம்பமாகும் என்று இராணுவத் தளபதி தெரிவித்தார். (நி-4)

# வெளியிடப்படும் உயிரிழப்புகள் ஒரு நாளில் ஏற்பட்டதல்ல

## விளக்குகிறார் மருத்துவர்



(கொழும்பு)

வெளியிடப்படும் கொவிட் - 19 மரணங்கள் 24 மணித்தியாலங்களுக்குள் இடம்பெற்றவை அல்ல என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

சில சந்தர்ப்பங்களில் இரண்டு, மூன்று தடவைகள் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவை கொவிட் மரணங்களாக உறுதிப்படுத்தப்படும்.

இவ்வாறு உறுதிப்படுத்தப்படும் மரணங்கள் ஒரே தடவையில் அறிவிக்கப்படும். அதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-4)

# வீதி விபத்துக்களால் 15 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் பதிவான வீதி விபத்துக்களில் மொத்தம் 15 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். எட்டு வாகனசாரதிகளும், ஏழு பாதசாரிகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். நேற்று முன்தினம் நடந்த விபத்துக்களில் எட்டுப் பேர் உயிரிழந்ததாகவும் அதற்கு முன்னர் பதிவான விபத்துக்களில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஏழு பேருமே உயிரிழந்தவர்கள் ஆவர் என அவர் தெரிவித்தார். (நி-4)

# பொலிஸ் வேடத்தில் கொள்ளையர்கள்

(கொழும்பு)


குற்றவியல் புலனாய்வு அதிகாரிகள் என்ற போர்வையில் போலிக் கும்பல்கள் சிலவற்றினால் இந்நாட்களில் கொள்ளை உட்பட பல்வேறு குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று பகல் வேளையில் இவ்வாறான இரண்டு கொள்ளைக் குழுக்கள் கதிர்காமம் நகரம் மற்றும் பலப்பிட்டிய பிரதேசத்தில் இரண்டு விகாரைகளுக்குச் சென்று ள்ளதாகவும் தெரிவித்தார். (நி-4)




# உண்மை என்பது என்ன?



ஒரு தடவை முல்லா சில பொருட்கள் வாங்குவதற்காக சந்தைக்குச் சென்றார்.

அங்கே ஓரிடத்தில் பத்துப் பதினைந்து பேர் கும்பலாகக் கூடி எதைப் பற்றியோ விவாதித்துக் கொண்டிருந்தனர்.

“இங்கே என்ன நடக்கிறது?” என்று முல்லா விசாரித்தார்.

“நல்ல சமயத்தில் வந்தீர் முல்லா அவர்களே... நாங்கள் ஒரு விடயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் எங்களில் யாருக்குமே எங்கள் ஆராய்ச்சி பற்றி ஒரு முடிவுக்கு வர முடியவில்லை.

எங்கள் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கிறீரா?” என்று கூட்டத்திலிருந்த ஒருவர் கேட்டார்.


“உங்கள் சந்தேகம் என்ன?” என்று முல்லா கேட்டார்.

“உண்மை உண்மை என்ற எல்லோரும் பிரமாதமாகப் பேசுகிறார்களே, அந்த உண்மை என்பது என்ன?” என்று கூட்டத்திலிருந்த ஒருவர் வினா எழுப்பினார். முல்லா பெரிதாகச் சிரித்தார்.

“இந்தச் சின்ன விடயம் உங்களுக்கு விளங்கவில்லையா? உலகத்தில் எந்த ஒரு மனிதனும் சிந்திக்கவோ, பேசவோ, செயற்படவோ விரும்பாத ஒரு வரட்டுத் தத்துவம் தான் உண்மை” என்று கூறி விட்டு முல்லா அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சிரஞ்சீவி அலெக்சாண்டர்




ஹெபஸ்டியோனுக்கு வைத்தியம் பார்த்த மருத்துவரின் தலையைக் கொய்யுங்கள் என்று உத்தரவு வந்தது அலெக்சாண்டரிடமிருந்து.

அவ்வளவு கோபம். மது குடித்தார். குடித்தார் குடித்துக்கொண்டே இருந்தார்.

அரேபிய நாடுகள் மீது படையெடுப்பதற்காக பாபிலோன் சென்று கொண்டிருந்தார் அலெக்சாண்டர்.

ஆனாலும் நோக்கத்தை எல்லாம் மறந்து மதுவிலேயே ஊறிக் கொண்டிருந்தார். பலவீனம் பரவ ஆரம்பித்தது அவரது உடலிலும் மனதிலும்.

அலெக்ஸாண்டர் உடல் ரீதியாக வலுவிழந்து விட்டார். அவருடைய படைகள் அழிந்து விட்டன. இப்படியொரு வதந்தி தீயாகப் பரவத் தொடங்கியது.

பல மன்னர்கள் அலெக்சாண்டரிடம் சரணடைவதற்குப் பதிலாக வந்து பார் ஒரு கை பார்க்கிறேன் என்று சவால் விடும் அளவுக்கு தைரியமாகப் பேசத் தொடங்கினர். அவருக்குக் கீழே இருந்த பல நாடுகளில் கலகங்கள் உருவாகத் தொடங்கின.

அவரால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர்களே மக்களைப் புரட்சி செய்வதற்கு மறைமுகமாகத் தூண்டிவிட்டனர். ஒரு பக்கம் கடல் பயணம் வேறு பாதியில் இருந்தது.

இன்னொரு பக்கம் சொந்த நாட்டில் குழப்பங்கள் உச்சத்தில் இருந்தன.

என்ன செய்வது? நெருக்கடி. அதனால் கொஞ்சம் மீண்டார் அலெக்சாண்டர்.

நிறைய யோசித்தார். தன்னுடைய நண்பர்கள், ஆலோசகர்கள் எல்லோரிடமும் பேசினார். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு இறுதியாக ஒருமுடிவு எடுத்தார்.

நீர்கஸ், உடனே கடற்படையை தலைமையேற்று பயணத்தைத் தொடர்ந்து நடத்து.

நான் முதலில் நம்முடைய ஆளுகைக்குட்பட்ட நாடுகளில் நடக்கும் கலகங்களைக் கட்டுக்குள் கொண்டு வருகின்றேன். (தொடரும்)

# 130 நாடுகளுக்கு இதுவரை ஒரு டோஸ் தடுப்பூசி கூட கிடைக்கவில்லை-ஐ.நா.கவலை

(ஜெனிவா)

**சுமார் 130 நாடுகள் ஒரு டோஸ் கொரோனாத் தடுப்பு மருந்தைக் கூடப் பெறவில்லை என ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் அன்டோனியோ குட்டேரஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தடுப்பு மருந்து விநியோகம் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த குட்டேரஸ், 'சுமார் 130 நாடுகள் ஒரு டோஸ் கொரோனாத் தடுப்பு மருந்தைக் கூடப் பெறவில்லை.

வெறும் 10 நாடுகளுக்கு சுமார் 75 சதவீதம் கொரோனா தடுப்பு மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இது நியாயமற்றது. அனைத்து நாடுகளுக்கும் கொரோனாத் தடுப்பு மருந்துகள் சென்றடைய வேண்டும்'



என அவர் தெரிவித்தார். (நி-4)

## கொவிட் தடுப்பூசி போட மறுத்தால் அபராதம்

(ஜகார்த்தா)

கொரோனாத் தடுப்பு மருந்தைப் போட மறுத்தால் அபராதம் விதிக்கப்படும் என்று ஜகார்த்தா ஆளுநர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் கொரோனாப் பரவலைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுகுறித்து ஜகார்த்தா ஆளுநர் அகமத் ரிசா கூறும்போது, "ஜகார்த்தா குடியிருப்பாளர்கள் கொரோனாத் தடுப்பு மருந்தைப் போட மறுத்தால் 356.89 டொலர் வரை அபராதம் விதிக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார். (நி-4)

# நாசாவின் செவ்வாய் ஆராய்ச்சி நெற்றியில் பொட்டுடன் தலைமை தாங்கி வழிநடத்திய இந்திய விஞ்ஞானி

(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, 'பேர்சவரன்ஸ் (Perseverance) என்ற ரோவர் விண்கலத்தை செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பியுள்ளது.

செவ்வாய்க் கிரகத்தை ஆராய்ச்சி செய்யும் நாசாவின் இந்தப் பயணத்தை வழிநடத்திய பெருமையை இந்திய வம்சா வளிவிஞ்ஞானிசுவேதா மோகன் பெற்றுள்ளார்.

கர்நாடக மாநிலம் பெங்களூ



ரில் பிறந்த சுவாதி, தனது முதலாவது வயதில் அமெரிக்காவுக்குச் சென்றதுடன், பள்ளிப் படிப்பின்போது குழந்தைகள் நல மருத்துவராக வேண்டும் என எண்ணியதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், 'ஸ்டார் டிரெக்' தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்து புதிய உலகங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் விண்வெளி ஆய்வில் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்புகளுடன் ஆராய்ச்சி முடித்து டாக்டர் பட்டமும் பெற்றுள்ளார்.

மேலும் நாசாவின் சனிக் கிரகத்துக்கான பயணம், நிலவுக்கான பயணத் திட்டங்களிலும் இவர் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# தமிழக சட்ட சபைத் தேர்தல்
## இரண்டு தொகுதிகளை குறிவைக்கும் கமல்



(சென்னை)

எதிர்வரும் தமிழக சட்ட சபை தேர்தலில் தென்சென்னை தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் இரண்டு தொகுதிகளில் போட்டியிட கமல் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


நடிகர் கமலின் மக்கள் நீதி மய்யம் கட்சியின் நான்காம் ஆண்டு துவக்க விழா நாளை 21 ஆம் திகதி ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நடக்க உள்ளது.

அன்று, கூட்டணி கட்சிகள் குறித்து உறுதி செய்யப்படும் என கூறப்படுகிறது. அதுமட்டுமின்றி, அன்றைய தினம், தேர்தலில் போட்டியிட விரும்புவர்களிடம் விருப்ப மனுக்களும் பெறப்படுகின்றன.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில், தென்சென்னை தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் கமல் கட்சிக்கு வாக்கு வங்கி அதிகமாக இருந்தது.

இதனால் தென்சென்னை பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட தியாகராய நகரிலோ அல்லது மைலாப்பூரிலோ அல்லது இரண்டிலுமோ போட்டியிட கமல் விருப்பப்படுகிறார் என அவரது கட்சி வட்டாரத்தில் கூறப்படுகிறது. (நி-4)

# செவ்வாயில் தரையிறங்கியது நாசாவின் புதிய ரோவர் ரோபாட்



(வோஷிங்டன்)

செவ்வாய்க் கோளின் மேற்பரப்பில் புதிய ரோவர் ரோபாட் களமிறக்கப்பட்டு இருக்கிறது. செவ்வாயின் பரப்பில் இப்படி ஓர் இயந்திர ரோவரை நாசா களமிறக்குவது இது இரண்டாவது முறை ஆகும்.

இந்த ரோவர் செவ்வாயில் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும். அமெரிக்காவின் நாசா தன் பேர்சவரன்ஸ் ரோவர் இயந்திரத்தை வெற்றிகரமாக ஜெசெரோ என்றழைக்கப்படும் செவ்வாயின் மத்திய ரேகை பகுதிக்கு அருகில் ஓர் ஆழமான பள்ளத்தில் தரையிறக்கப்பட்டு இருக்கிறது.

பேர்சவரன்ஸ் ரோவர் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு செவ்வாய்க் கோளின் பாறைகளைத் துளையிடுவது மற்றும் அக்கோளில் முன்பு உயிரினங்கள் வாழ்ந்திருந்ததற்கான ஆதாரங்களைத் தேடவிருக்கிறது.

செவ்வாயில் ஜெசெரோ பகுதியில் பில்லியன் கணக்கிலான ஆண்டுகளுக்கு முன் ஒரு பெரிய ஏரி இருந்ததாகவும் அதில் நீர் இருந்ததாகவும் கருதப்படுகிறது.

பேர்சவரன்ஸ் ரோவர் நேற்று முன்தினம் செவ்வாயில் தரையிறங்கியது என ரோவரின் தரையிறங்கும் அணியின் தலைவர் ஆலென் சென் குறிப்பிட்டார்.

பேர்சவரன்ஸ் ரோவர் தன்னோடு ஒரு சிறிய ஹெலிகொப்டரை எடுத்துச் சென்றுள்ளது. விரைவில் செவ்வாய்க்கோளில் ஹெலிகொப்டர் பறக்க விடும் சோதனை நடைபெறும். இப்படி வேறொரு கோளில் மனிதர்கள் ஹெலிகொப்டரை பறக்க விட முயற்சிப்பது இதுவே முதல் முறையாகும். (நி-8)

# இளவரசர் பிலிப் மருத்துவமனையில் அனுமதி



(லண்டன்)

இங்கிலாந்தின் 99 வயதான இளவரசர் பிலிப் உடல் நிலை சரியில்லாமல் லண்டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை கடந்த புதன்கிழமை அறிவித்தது.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் கணவர் இளவரசர் பிலிப் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இளவரசர் பிலிப் சில நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

எடின்பர்க் டியூக் என்றும் அழைக்கப்படும் பிலிப், 2017 இல் தனது பொறுப்புகளில் இருந்து ஓய்வு பெற்றார். பொது நிகழ்ச்சிகளில் அரிதாகவே கலந்துகொண்டார். இங்கிலாந்தில் தற்போது ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளதால் அவர் லண்டனுக்கு மேற்கே உள்ள வின்ட்சர் கோட்டையில் ராணியுடன் தங்கியுள்ளார். (நி-4)

# என் தந்தையைக் கொன்றவர்களை மன்னித்து விட்டேன்-ராகுல் காந்தி தெரிவிப்பு

(டில்லி)

தனது தந்தையான முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையுடன் தொடர்புடையவர்களை மன்னித்து விட்டதாக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

புதுவையில் கல்லூரி மாணவிகளிடையே உரையாற்றிய ராகுல் காந்தி, தனது தந்தையை இழந்தமை வலியைத் தந்ததாகவும் அதற்காக தாம் கோபப்படவில்லை என்றும் கொலைக்கு பொறுப்பானவர்கள் மீது வெறுப்போ கோபமோ ஏற்படவில்லை என கூறிய ராகுல் காந்தி அவர்களை மன்னித்து விட்டதாகத் தெரிவித்தார். (நி-4)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–301

## ஒரு சுகாதாரம் (One Health) என்னும் அணுகுமுறை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய - உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஒரு சுகாதாரம் என்பது 1964 ஆம் ஆண்டு கெல்வின் சுவாபே என்னும் பொதுச் சுகாதார வைத்தியரினால் "ஒரு மருத்துவம்" என பெயர் புனையப்பட்டு கால்நடைகளுக்கான மருத்துவப் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தது. அதனை அடியொற்றி கால்நடைகளில் மனிதர்களில் மற்றும் தாவரங்களில் இன்னும் சுற்றுச் சூழலில் என அனைத்தையும் ஒன்றிணைத்த சுகாதாரத்தை குறிப்பிடுவதாக பின்னைய நாட்களில் அதற்கு ஒரு சுகாதாரம் என பெயரிடப்பட்டு தற்போது உலக உணவு மற்றும் விவசாய தாபனத்தினால் இது மேற்கொண்டு கொண்டாடப்படும் முக்கிய பதமாக மாறி விட்டிருக்கின்றது. சுற்றுச் சூழல் பாதுகாப்பு, பாரம்பரிய மருத்துவம், இயற்கையுடனான வாழ்க்கை இவையனைத்தையும் உள்வாங்கிய சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற கருப்பொருளாக "ஒரு சுகாதாரம்" மாறி விட்டிருக்கின்றது.

ஒரு சுகாதாரம் எனப்படுவது அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிலுள்ள நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான நிலையத்தினால் (Centres for Disease Control and Prevention - CDC) பெயரிடப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. 2009ஆம் ஆண்டில் இருந்த லொன்னி எனும் அறிஞர் அனைவரையும் ஒன்றிணைந்து புரிந்துணர்வுடன் பல்துறைசார்ந்து கீழ்மட்டத்திலிருந்து கிராம மட்டத்தில், பிரதேச மட்டத்தில், தேசிய மட்டத்தில் மற்றும் உலகளாவிய ரீதியில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு இயக்கம் அல்லது அணுகுமுறை என குறிப்பிடலாம்.

இவ்வியக்கத்தில் அனைவருக்கும் அனைத்துக்குமான சுகாதாரத்தை எட்டுவதற்கான அணுகுமுறைகளை அனைத்து தேசத்து மக்களை, விலங்கினங்களை, தாவரங்களை இன்னும் அனைத்தும் சார்ந்த சுற்றுச் சூழலை உள்ளடக்கியதான தொடர்புபடுத்தலூடாக அனைவருக்குமான சுகாதாரத்தை பேணுதல் என்பதாகும். ஒரு சுகா தாரம் என்பதன் வரலாறு சற்று வித்தியாசமானது.

ஒரு சுகாதாரம் என்பது புதிய கருப்பொருளாக காணப்படுகின்ற போதிலும் இந்த கருத்தினை பலவாண்டுகளுக்கு முன்னரேயே பிரேரித்திருந்தனர் என்பதனை அறிய முடிகின்றது. 1800களில் விஞ்ஞானிகள் மனிதரிலும் விலங்குகளிலும் ஒரே மாதிரியான நோய்கள் காணப்படுவதனை அவதானித் திருந்தனர். அந்த காலப்பகுதியில் இவ்வாறாக மனிதரில் ஏற்படும் நோய்கள் விலங்குகளில் காணப்படுவதனால் இரு உயிரினங்களையும் ஒன்றாக தாக்குகின்ற நோய்கள் காணப்படுவதனால் இரண்டிலும் ஒரு மித்த நோயினை கட்டுப்படுத்த ஒரு சுகாதாரம் என்னும் கருப்பொருளை முன்வைத்து சுகாதார நடைமுறைகளையும் பரிந்துரைகளையும் 20 ஆம் நூற்றாண்டு வரை வெவ்வேறாக கடைப்பிடித்தனர்.

பிந்திய காலங்களில் இவ்வாறான நோய்கள் விலங்கிலும் மனிதனிலும் ஏற்படுவதனை முறையாக கண்டுபிடித்ததன் காரணமாக இரண்டிலும் ஒன்றாக வரும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு சுகாதாரம் என்னும் கொள்கையின் அடிப்படையில் அவற்றை கட்டுப்படுத்துவதற்கும் இன்னும் அவற்றின் பரவலை

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 314




மட்டுப்படுத்துவதற்கும் வழிவகைகளை கண்டு பிடித்து அவற்றை நெறிமுறைப்படுத்தினர்.

இந்த வரலாறு பிந்திய நாட்களில் விலங்குகள் மூலமாக மனிதருக்கு நோய்கள் பரவுகின்றன என்பதனை விஞ்ஞான பூர்வமாக ஊர்ஜிதப்படுத்திய பின்னர் அந்த நோய்களை கட்டுப்படுத்துவதாயின் விலங்குகளில் முதலில் அவற்றை கட்டுப்படுத்துவதற்கு முயற்சியெடுத்தனர்.

இந்த வகையிலேயே எலிக்காய்ச்சல், பறவைக்காய்ச்சல், ஈபோலா, மலேரியா, டெங்கு தற்போது கொரோனா என விலங்கிலிருந்து மனிதருக்கான தொற்று நோய்கள் தொடர் கதையாகிப் போய்க்கொண்டிருக்கின்றது.

இதற்கு முன்னரும் விலங்கிலிருந்து மனிதருக்கு தொற்றிய வைரஸ் நோய்கள் பல மனித உயிர்களை காவு கொண்டிருப்பதனை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் தற்போது பரவிவரும் கொரோனா நோயானது பலவுயிர்களை காவு கொண்டிருப்பது மட்டுமல்ல இன்னும் கட்டுக்கடங்காது பல நாடுகளில் கோரத் தாண்டவமும் ஆடியிருக்கின்றது.

டாவினின் தக்கெனப் பிழைத்தல் தற்போது நிதர்சனமாகி வருவதனை நாம் காண முடிகின்றதென்பதற்கப்பால் பலவுயிர்களை விரைந்து காவுகொள்ளுகின்றது என்பது நம்பமுடியதாதாகவும் எதிர்காலத்தினை மையப்படுத்தி ஒரு நிச்சயமற்ற தன்மையையும் உருவாக்கி விட்டிருக்கின்றது.

ஒரு சுகாதாரம் என்பதனை ஒரு அணுகுமுறையாக பார்க்கலாம். இன்னும் இதனை மேலும் உதாரணங்களுடன் விளங்கிக் கொள்ளலாம். ஆரம்ப காலங்களில் விலங்கிலிருந்து நோய்கள் மனிதனுக்கு என்பதனை ஆதார பூர்வமாக விளங்கிக் கொள்ள காலங்கள் பலவாகின. விஞ்ஞான தொழில் நுட்பத்தின் வளர்ச்சி இதன்சாத்தியப்பாட்டினை அனைவரையும் நியாயபூர்வமாக உணர வைத்தது.

மாற்றிப்பார்த்தால், விலங்கிலிருந்து பிறந்தவன் மனிதன், கொம்பேறித்தாவும் விலங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்னும் பாடல் வரிகளை நாம் பலதடவைகளில் கேட்டிருப்போம். மனிதனும் விலங்கு இராச்சியத்தில் ஒன்றாக கருதப்படும் விலங்காக கணிக்கப்படும் போது முதன்மை விலங்காக எம்மை மையப்படுத்தியதால் மனிதன் விலங்கிலிருந்து பிறந்திருக்கின்றான் என்பதனை நாம் மறுப்பதற்கில்லை.

பிந்திக் கிடைத்த ஆதாரங்களை வைத்து இதனை ஊர்ஜிதம் செய்திருப்பதிலிருந்து எமக்கும் விலங்குகளுக்கும் பலவழிகளில் ஒற்றுமையிருப்பதனை நாம் அவதானிக்க முடிகின்றது. இந்த வகையில் வைத்து நாம் மேலும் விளங்கிக் கொண்டால் எமது பூர்வீகம் விலங்கிலிருந்து என்பதனால் அந்த தொடர்பு விலங்குகளுக்கு வருகின்ற நோயும் அதிலிருந்து மனிதனுக்கு வரக்கூடிய சாத்தியப்பாடுகள் அதிகம் எனவே சுட்டிநிற்கின்றது. இவற்றை நிதர்சனப்படுத்துவதாகவே எலிக்காய்ச்சல், பறவைக் காய்ச்சல், இன்னும் செல்லப் பிராணிகளால் காவப்படும் பேன் காய்ச்சல், உண்ணிக் காய்ச்சல், லெஸ்மேனியாசிசு, இன்னும் நுளம்பினால் காவப்படும் மலேரியா, டெங்கு, இன்னும் பலப்பல தொற்று நோய்கள் என்பனவற்றை நாம் இனங்காணலாம். இவ்வாறான நோய்கள் எமக்குள் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதனை கடந்த காலத்தில் நாம் அவதானித்திருக்கின்ற போதிலும் இவற்றினாலான தாக்கம் இன்னும் அதிகரிக்க இருப்பதனை கிடைக்கின்ற தகவல்கள் கட்டியங் கூறிநிற்கின்றன.

ஆக மொத்தத்தில் எமது சுகாதாரம் என்பது எமது சூழல் சார்ந்திருப்பதுடன் எம்முடன் உறவாடும் செல்லப்பிராணிகள், எமது சூழலில் காணப்படும் விலங்குகளான எலிகள் கரப்பான் பூச்சி தொடக்கம் சிற்றுண்ணி மற்றும் உண்ணிகள் இவற்றுடன் மற்றைய விலங்குகள் மூலம் பரவக்கூடிய நோய்கள் என அனைத்தையும் பார்த்தால் நாம் அனைத்தையும் ஒன்றிணைத்த சுகாதார நெறிமுறைகளுக்குள் உள் ளாக வேண்டும் என்பதனை வெளிப்படுத்தியிருக்கின்றது.

இதனையே கொரோனா வைரஸின் தாக்கத்தினுள்ளும் ஆரம்பத்திலிருந்து தற்போதுள்ள காலம் வரைநாம் அறிந்தும் கேட்டும் வருகின்றோம். ஆயின் சுகாதாரம் என்பது எமக்கு மட்டுமான சுகாதாரம் அல்ல என்பதும் நாம் வாழும் சூழலுக்குரியதான விலங்குகள், தாவரங்கள் மற்றும் அனைத்து உயி ரினங்களுக்குமான ஒருமித்த சுகாதாரமாக அமைய வேண்டும் என்பது இங்கே சொல்லா மல் சொல்லும் செய்தியாக அனைவரும் ஒருமித்து கடைப் பிடிக்க வேண்டிய நெறி முறையாக இருக்கின்றது.

இதில் எமது நடமாட்டம், நடமாட்டத்தில் பயன்படும் வாகனங்கள். எமது உணவு, ஊட்டச்சத்து, விளையாட்டு, வாழ்வாதாரம், கல்வி, வேலை, மற்றும் வாழ்வியல் என்பன அனைத்தும் ஒன்றிணைந்திருக்கின்றன.

ஒன்றைத் தவிர்த்து நமது வாழ்க்கையை நாம் வாழ்ந்திட முடியாது. எமக்கான கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் விழுமியங்கள் அனைத்து இதனுள் உள்ளடங்கலாக நாம் வாழ்ந்திட பல தடைகள், பிரச்சினைகள் எம்முன்னே வரவிருக்கின்றன என்பதனை நாம் உணர்வுபூர்வமாக உணரத்தலைப் பட்டுள்ளோம்.

காலநிலை மாற்றம் இன்னும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஊக்குவிப்பதாக மாறத் தொடங்கியிருப்பது எம்முன்னே இருக்கும் மிகப்பெரிய சவாலாகும்.

நுண்ணுயிர் கொல்லிகளுக்கெதிரான எதிர்ப்பு சக்தி நுண்ணங்கிகளில் உருவாவது விஞ்ஞானத்திற்கு சவால் விடும் அதேநேரத்தில் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினையாக உருவாகும்.

இதுவே உலக ரீதியில் தற்போதுள்ளதை விட பஞ்சம், பட்டினி, புதிய நோய்கள் என பலவாறாக உருப்பெருக்கமடையலாம். வருங்காலத்தில் இன்னும் புதிய நோய்களின் உருவாக்கம் தவிர்க்க முடியாததாகிவிடும்.

இவையனைத்தையும் தாண்டி நாம் ஒரு சுகாதாரம் என்னும் அணுகுமுறையை செம்மையாக நடை முறைப் படுத்தி அனைத்து இடர்களிலிருந்தும் எம்மைக் காக்கும் அதேநேரத்தில் அனைத்து உயிர்களையும் காப்பாற்றுவோமாக.

# ஒரு கிலோ அரிசி 91 ரூபாவிற்கு வழங்கத் தீர்மானம் - மகிந்தானந்த

(கொழும்பு)

**தமிழ்-சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் ஒரு கிலோ அரிசி 97 ரூபாய் என்ற உத்தரவாத விலைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.**



நெல்அறுவடை இடம்பெறும் மாவட்டங்களில் உத்தரவாத விலையின் கீழ், நெல் கொள்வனவு செய்யப்படுகிறது.

விவசாயிகளுக்கு உரமானியமும் வழங்கப்படுகிறது.

நெல்லை கொள்வனவு செய்வதற்கென அரசாங்கம் 23 ஆயிரம் மில்லியன் ரூபாவினை ஒதுக்கியிருக்கிறது.

வரலாற்றில் நெல் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்ட மிகக் கூடுதலான தொகை இதுவாகும் எனவும் விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# சமலுக்கு மீண்டும் இரு இராஜாங்க அமைச்சுகள்

(கொழும்பு)


தேசிய பாதுகாப்பு, இடர் முகாமைத்துவம் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சராக சமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதுவரை இருந்து வந்த தேசிய பாதுகாப்பு, இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு தேசிய பாதுகாப்பு, இடர் முகாமைத்துவம் மற்றும் உள்நாட்டலுவல்கள் என இரண்டு இராஜாங்க அமைச்சுக்களின் கீழ் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இந்த புதிய பதவிப் பிரமாணம் இடம்பெற்றது. (நி-4)

# சீனப் பொருட்களை மட்டுமே கொள்வனவு செய்யும் நிலை ஏற்படும்

## எச்சரிக்கிறார் ரணில்

(கொழும்பு)



இலங்கைக்கு சீனா வழங்கும் யுவானால் சீனப் பொருட்களை மாத்திரமே எமக்கு கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும்என ஐக்கியதேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கட்சி உறுப்பினர்களுடான கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை எதிர்கொள்வதில் அரசாங்கம் கடும் சவால்களை எதிர்கொள்கிறது.

சீனாவிடம் 1500 மில்லியன் டொலர்களை இலங்கை கோரிய போதிலும் 1500 யுவான்களை வழங்கவே சீனா முன்வந்துள்ளது.

சீன யுவான்களை இலங்கை பெற்றுக் கொண்டாலும் டொலரிலேயே மீள் செலுத்த வேண்டும்.

இதன்போது திறைசேரியின் இருப்பு வீதம் அதிக புள்ளியில் காணப்பட்டாலும் அமெரிக்க டொலர்கள் அந்நிய செலாவணி இருப்பாக இலங்கையிடம் காணப்படாது.

இதனால் சீனப் பொருட்களை மாத்திரமே எமக்கு கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

அதற்கும் தற்போதுள்ள சீனப் பொருட்களுக்கான கொள்வனவு கட்டுப்பாட்டை அகற்ற வேண்டும்.

அவ்வாறு செய்தால் ஏனைய நாடுகளுடனான பொருளாதார கொள்கைகளிலும் உறவுகளிலும் பாதுகாப்பு ஏற்படும்.

இது நிச்சயம் வேறு ஒரு பிரச்சினையை உருவாக்கும் என்பதே எமது நிலைப்பாடாகும் என ரணில் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# வியப்பு

ஒரு நண்பர் அவசரமாக என்னிடம் ஓடி வந்தார்.பின்பு சொன்னார் என்னாலே நம்பவே முடியவில்லை சேர்.. என் பையனா இப்படி? என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்.

உங்கள் பையன் அப்படி என்ன தான் செய்து விட்டான்? என்று கேட்டேன்.என்னாலே முடியாத ஒரு காரியத்தை அவன் செய்துவிட்டான் சேர் என்றார்.

அது என்ன என்று தான் சொல்லுங்களேன் என்றேன்.ஐந்தாவது வகுப்பிலே அவன் ஒரே தடவையில் தேறிவிட்டான் சேர் அதாவது ஒரே அட்டம்ப்ட் இலே பாசாகியிருக்கின்றான் சேர். என்றார் மூச்சு வாங்க. கஷ்டப்பட்டுப் பரீட்சை எழுதினது அவன். இவருக்கு ஏன் மூச்சு வாங்குவது. எங்களால் செய்ய முடியாத ஒரு காரியத்தை இன்னொருத்தர் செய்யும் போது அது நமக்கு ஆச்சரியமாக இருக்கு.

சர்க்கஸ் பார்க்கின்றோம். ஒருத்தர் அந்தரத்திலே தொங்குகின்றார். அது நமக்கு ஆச்சரியம் ஏன் என்றால் அது நம்மளாலே முடியாத காரியம்.

எங்களால் முடியாத ஒன்றை பிறர் எளிதாகச் செய்யும் போது நாம் மருள்வது இயற்கை. இதைத் தான் தொல்காப்பியம் மருட்கை என்று சொல்கின்றது.

இந்த வியப்பு இருக்கின்றதே.. இது நான்கு வகையில் ஏற்டுவதாக தொல்காப்பியம் சொல்கிறது. அது என்ன நான்கு வகை?முதல் வகை எப்படி என்றால் புதுமையான அரிய செயல்களைச் செய்வது.இரண்டாவது வகை பெரும் செயல்களைச் செய்வது. மூன்றாவது வகை மிக நுட்பமான செயல்களைச் செய்வது.

நாலாவது வகை ஆக்கம் தரும் செயல்களைச் செய்வது.

"புதுமை, பெருமை
சிறுமை, ஆக்கமொடு
மதினம் சாலா
மருட்கை நான்கே! "(தொல்காப்பியம்)

இன்றைக்கு விஞ்ஞானம் புதிது புதிதாக எதை எதையோ கண்டு பிடிக்கின்றது. ஆரம்பத்திலே அது ஆச்சரியமாக இருக்கு... பின்பு அது நமக்குப் பழகிப் போய்விடுகின்றது.

வானொலிப் பெட்டி புதிதாக வந்தபொழுது..ஒரு பெட்டி பேசுகின்றது எவ்வளவு ஆச்சரியமான ஒரு விடயம். இப்பொழுது யாரும் அவ்வளவு ஆச்சரியமாக அதைப் பார்க்கிறதில்லை.

"மதினம் சாலா மருட்கை" என்று ஒரு சொற்றொடர் வருகின்றது பாருங்கள்.அதிலே கருத்தாழம் உண்டு.

எதைப் பற்றியும் போதுமான அளவு புரிந்து கொள்ளாத போது ஒருவர் ஆச்சரியப்படுகின்றார். புரிந்து கொண்ட பிறகு ஆச்சரியம் மறைந்து போய் விடுகின்றது.மிக நுட்பமான செயல்களும் எங்களை ஆச்சரியப்பட வைக்கின்றது. ஒரு அரிசியில் ஒரு திருக்குறளை எழுதிக்காட்டுகின்றார்கள்.

ஒரு முட்டை ஓட்டுக்குள்ளே ஓவியம் தீட்டிக் காட்டுகின்றார்கள்.கருங்கல் சிற்பங்களிலே எவ்வளவு நுட்பமான வேலைப் பாடுகளை எல்லாம் பார்த்து ஆச்சரியப்ப டுகின்றோம்.இதுபோலவே ஆக்க பூர்வமான அரியசெயல்களைச் செய்வது கூட வியப்பை உண்டு செய்யும்.குப்பை கூழங்களைக் கூட வாழ்க்கைக்குப் பயன்படுகின்ற பொருளாக மாற்றுகிறவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுடைய செயல் வியப்பை அளிக்கின்றது.

இடைக்காட்டுச் சித்தர் பாடிய மூவடி முப்பது என்கின்ற நூலிலே வருகின்ற ஒரு பாடல் இது.

" ஆற்றல் பிறர் அறிதலின்
அகம் கிளர்வு உறுதலின்
கற்று அறி பாணர்
கெழுமிய கோடலின்
தோற்றம் உறுகவே
போற்றல்சால் வியப்பே !"

ஒருத்தருடைய ஆற்றல் தெரியாமல் இருந்தது. அவருடைய அரிய செயலைப் பார்க்கும் போது வியப்பாக இருந்தது. மனதுக்குள்ளே கிளர்ச்சி. பாவலர்கள் இவர்கள் புகழைப் பாடி மற்றவர்களும் தெரிந்து கொள்ளுமாறு செய்கின்றார்கள்.ஆக எல்லா வகையிலும் மக்கள் தங்களுடைய வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு வழிகாட்டுகின்ற ஒரு மெய்ப்பாடு தான் வியப்பு என்கின்றது.இந்தக் காலத்திலே எங்களை எப்படியெல்லாமோ ஆச்சரியப்பட வைக்கின்ற மனிதர்கள் இருக்கின்றார்கள்.

ஒரு ஆளைப்பிடித்து ஜெயிலுக்குக் கொண்டு வந்தார்கள். சிறை அதிகாரி அவனை மிகவும் ஆச்சரியமாகப் பார்த்தார்.இவன் கேட்டான். ஏன் சேர் அப்படி என்னைப் பார்க்கின்றீர்கள்.. நான் இப்பொழுது இங்கே வருவது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கின்றதா? என்று கேட்டான்.

இதற்கு சிறை அதிகாரி சொன்னார்...

நீ இப்பொழுது வந்ததிலே எனக்கு ஒன்றும் ஆச்சரியமில்லையப்பா.. ஏற்கனவே நீ இங்கேயிருந்து விடுதலையாகிப் போய் ஆறுமாதம் ஆகிவிட்டது. இவ்வளவு லேட்டாக இங்கே வருகின்றாயே அது தான் எனக்கு ஆச்சரியம் என்றார்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

10

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



ஒக்டோபர் 2020 நிலவரப்படி, இடாஹோ, மினசோட்டா மற்றும் நியூ ஹாம்ப்ஷயர் தவிர ஒவ்வொரு மாநிலமும் ஒரு தற்காலிக வாக்களிப்பு முறையை நிறுவியிருந்தன. கூட்டாட்சிச் சட்டம் தற்காலிக வாக்களிப்பு செயல்முறைகளைக் கட்டாயப்படுத்தினாலும் அந்தச் செயல்முறைகளை மாநிலங்களே வரையறுக்கின்றன. இதன் விளைவாக, தற்காலிக வாக்குப்பதிவு முறை மாநிலத்திற்கு மாநிலம் பரவலாக மாறுபட்டு காணப்படுகிறது.

ஒரு தற்காலிக வாக்குச்சீட்டு கணக்கிடப்படுகிறதா? இல்லையா? என்பது அந்த வாக்காளரின் தகுதியை சரி பார்ப்பதன் மூலம் தீர்மானிக்கப்படும். இது கணக்கிடப்பட தேர்தலுக்குப்பின் 7-10 நாட்கள் வரை செல்லும். தற்காலிக வாக்குப் பதிவு செல்லுபடியாகும் என்று தீர்மானிக்கப்பட்டதும் அது கணக்கிடப்படுகிறது.

இவ்வாறு கணக்கிடப்பட்ட வாக்குகள் ஏற்கனவே கணக்கிடப்பட்ட வாக்குகள் எண்ணிக்கையுடன் சேர்க்கப்படும். இவை கணக்கிடப்படுமுன் அத்தாட்சிப்படுத்தப்படாத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கும். பொதுவாக இவ் வாக்கு அதிகரிப்பு கட்சிகளின் வாக்கு ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட முடிவுகளைப் பெரிதாகப் பாதிக்காது.

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தற்காலிக வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டது. இதற்குக் காரணம் பெரும்பாலான மக்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கு அனுமதியைப் பெற்று விட்டு அதற்குப் பதிலாக வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று வாக்களிக்க முடிவு செய்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் அவ்வாறு தற்காலிக வாக்குச்சீட்டுகளின் மூலம் வாக்களித்தவர் யாரும் இரண்டு முறை வாக்களிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த இவை கவனமாகச் சரி பார்க்க வேண்டி ஏற்பட்டதால் தற்காலிக வாக்குச் சீட்டு வாக்கு எண்ணலிலும் தாமதம் ஏற்பட்டது. இதனால் சில மாநிலங்களில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேர்தல் முடிவுகள் வெளியிட காலதாமதம் ஏற்பட்டது.

ஒரு வாக்களிப்பு நிலையத்தில் இந்த தற்காலிக வாக்குச்சீட்டுகள் மீதமுள்ள வாக்குச் சீட்டுகளிலிருந்து தனித்தனியாக வைக்கப்படுகின்றன. ஏனென்றால், வாக்காளர் வாக்களிக்கத் தகுதியுடையவரா? என்பதை மாநில அதிகாரிகள் தீர்மானிக்க வேண்டும். அதாவது இந்த வாக்குச்சீட்டுகள் எப்போதும் கடைசியாகவே எண்ணப்படும்.

**2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தற்காலிக வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டது. இதற்குக் காரணம் பெரும்பாலான மக்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கு அனுமதியைப் பெற்றுவிட்டு அதற்குப் பதிலாக வாக்குச் சாவடிக்கு நேரில் சென்று வாக்களிக்க முடிவு செய்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் அவ்வாறு தற்காலிக வாக்குச்சீட்டுகளின் மூலம் வாக்களித்தவர் யாரும் இரண்டு முறை வாக்களிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த இவை கவனமாகச் சரி பார்க்க வேண்டி ஏற்பட்டதால் தற்காலிக வாக்குச் சீட்டு வாக்கு எண்ணலிலும் தாமதம் ஏற்பட்டது.**

### நேரகால வாக்களிப்பு (Early voting) கால எல்லை என்ன?

தேர்தலுக்கு முன்கூட்டியே வாக்களிப்பு **(Early voting)**. தொடங்கும் திகதி மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபட்டு காணப்படுகின்றன என்று முன்னர் கூறியிருந்தேன். சில மாநிலங்களில் தேர்தலுக்கு 45 நாட்களுக்கு முன்பே வாக்களிக்க முடிவதோடு தேர்தல் தினத்திற்கு முந்தைய வெள்ளிக்கிழமை வரை இது நீடிக்கும்.

பொதுவாகக் கூறுவதாயின் முன்கூட்டியே வாக்களிப்பதற்கான சராசரி தொடக்க காலம் தேர்தலுக்கு 22 நாட்களுக்கு முன்னதாகும். அதுபோல் வாக்களிப்பு பொதுவாகத் தேர்தல் நாளுக்கு சில நாட்களுக்கு முன்பு முடிவடைகிறது. இவ் வாக்களிப்புக் கால இடைவெளியில் ஒரு மாநிலத்தில் சராசரியாக 19 நாட்கள் வாக்களிக்க முடியும். சில மாநிலங்களில் சனி அல்லது ஞாயிறு அல்லது சனியும் ஞாயிறும் மட்டுமே வாக்களிக்க முடியும்.

அமெரிக்காவில் மொத்தம் உள்ள 23.9 கோடி வாக்காளர்களில் 15.9 கோடி வாக்காளர்கள் **(66.1%)** 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்த லில் வாக்களித்திருந்தார்கள். இத்தேர்தலில் முன்கூட்டியே வாக்களித் தோர் (தேர்தலுக்கு முன்) 10.145 கோடி ஆகும். முன்கூட்டியே வாக்க ளித்த 10.145 கோடி பேரில் 3.581 கோடி பேர், தேர்தல் தினத்திற்கு முன் வாக்குச்சாவடிக்குச் சென்று நேரில் வாக்களித்தனர் (நேரகால வாக்களிப்பு). 6.564 கோடி பேர் தபால் வாக்களிப்புச் செய்தவர்கள் அல் லது தனது வாக்கினை குறிப்பிட்ட இடத்தில் உள்ள வாக்குப் பெட்டியில் **(Drop-off Point)** போட்டோர் ஆவர் (வராதோர் வாக்களிப்பு).

## EARLY VOTING SCHEDULE

### PRESIDENTIAL ELECTION

| ALL LOCATIONS ARE OPEN THE SAME DATES AND HOURS | | |
|---|---|---|
| Thursday-Friday | October 15-16 | 8am - 7:30pm |
| Saturday | October 17 | 8am - 3pm |
| Sunday | October 18 | 12pm-5pm |
| Monday-Friday | October 19-23 | 8am - 7:30pm |
| Saturday | October 24 | 8am - 3pm |
| Sunday | October 25 | 12pm-5pm |
| Monday-Friday | October 26-30 | 8am - 7:30pm |
| Saturday | October 31 | 8am - 3pm |

LOCATIONS:
Orange Works at Hillsborough Commons
113 Mayo St, Hillsborough
Carrboro Town Hall
301 W Main St, Carrboro
Chapel of the Cross
304 E Franklin St, Chapel Hill
Efland Ruritan Club
3009 Forrest Avenue, Efland
Seymour Senior Center
2551 Homestead Rd, Chapel Hill
University Mall
201 S Estes Dr, Chapel Hill

ELECTION DAY NOVEMBER 3, 2020

NO PHOTO ID REQUIRED

The Orange County Board of Elections office WILL NOT be an early voting site.

For more information, go to orangecountync.gov/Elect or call 919-245-2350

**அமெரிக்காவில் மொத்தம் உள்ள 23.9 கோடி வாக்காளர்களில் 15.9 கோடி வாக்காளர்கள் (66.1%) அதியர் தேர்தலில் வாக்களித்திருந்தார்கள். இத்தேர்தலில் முன்கூட்டியே வாக்களித்தோர் (தேர்தலுக்கு முன்) 10.145 கோடி ஆகும். முன்கூட்டியே வாக்களித்த 10.145 கோடி பேரில் 3.581 கோடி பேர், தேர்தல் தினத்திற்கு முன் வாக்குச்சாவடிக்குச் சென்று நேரில் வாக்களித்தனர் (நேரகால வாக்களிப்பு). 6.564 கோடி பேர் தபால் வாக்களிப்புச் செய்தவர்கள் அல்லது தனது வாக்கினை குறிப்பிட்ட இடத்தில் உள்ள வாக்குப் பெட்டியில் (Drop-off Point) போட்டோர் ஆவர்.**

அட்டவணை-1

| தபாலில் கிடைக்க வேண்டிய திகதி | மாநிலங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2020-11-02 | 1 |
| 2020-11-03 | 27 |
| **தபாலில் சேர்க்கப்பட வேண்டிய திகதி** | **மாநிலங்களின் எண்ணிக்கை** |
| 2020-11-02 | 5 |
| 2020-11-03 | 18 |

இந்த ஆண்டு கொரோனா வைரஸ் பரவலால் தபால் வாக்குகளின் எண்ணிக்கை (வராதோர் வாக்களிப்பு) அதிகரித்தது.

தபால் வாக்களிப்பின் அதிகரிப்பு வெளிப்படையாகத் தேர்தலின் ஒட்டுமொத்த வாக்குப் பதிவை வெகுவாக அதிகரித்திருந்தது. இவ் அதிகரிப்பினால் வாக்குகளை எண்ணுவதற்கு அதிகநேரம் எடுத்ததோடு தேர்தல் முடிவுகள் வெளியிடுவதையும் தாமதமாக்கியது.

அமெரிக்காவில் இற்றவரை காலமும் இந்த முறைமையில் மோசடி நடந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றாலும் தபால் வாக்களிப்புத் தேர்தல்களில் மோசடிக்கு வழிவகுக்கும் என்று ஜனாதிபதியாகவிருந்த ட்ரம்ப் தேர்தலுக்கு முன் கூறியிருந்தார்.

இதனால் தேர்தல்களின் முடிவுகள் குடியரசுக் கட்சிக்கு ஆதரவாக இல்லாவிட்டால் ட்ரம்ப் கேள்வி எழுப்பக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டதோடு அது தேர்தலின் பின் நடந்தும் விட்டது.

தபால் வாக்களிப்புத் தொடர்பாக அமெரிக்காவின் வெவ்வேறு மாநிலங்கள் வெவ்வேறு விதிகளைக் கொண்டிருப்பதால் இது ஒரு சிக்கலான செயல்முறையாகும். அமெரிக்காவில் 50 மாநிலங்கள் உண்டு.

அம் மாநிலங்களில் அளிக்கப்படும் தபால் வாக்குகள், தபா லில் கிடைக்க வேண்டிய திகதி அல்லது தபாலில் சேர்க்கப்பட வேண்டிய திகதி வித்தியாசமாக உள்ளன. இதனை அட்டவணை-1 காட்டுகிறது.

(தொடரும்...)

# பெறுமதிமிக்க தொல்பொருட்கள், பாதுகாக்கப்பட வேண்டும்

## பேராசிரியர் அநுர



(கொழும்பு)

புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் பெரும்பாலான தொல்பொருள் முக்கியத்துவமிக்க இடங்கள், புதையல் தோண்டுபவர்களினாலோ அல்லது வேறு நபர்களினாலோ சேதமாக்கப்படுவதாகத் தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை மிகவும் கவலைக்குரியதாகும் எனத் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள தொல்பொருள் பெறுமதிவாய்ந்த பொருட்களை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு முன்னர், நாட்டிலுள்ள தொல்பொருள் பெறுமதிவாய்ந்த பொருட்களையும் இடங்களையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## சிவ மூலிகைகளின் சிகரம் – வில்வம்

சிவ வழிபாட்டுக்கு எத்தனையோ மலர்கள் உகந்ததாக உள்ள போதிலும் வில்வ இலை தனித்துவம் கொண்டது.

வில்வ இலையால் சிவனை அர்ச்சனை செய்து வழிபடும் போது கிடைக்கும் பலன்கள் ஏராளம். யார் ஒருவர் தினமும் சிவாலயத்துக்குச் சென்று வில்வத்தை வழங்கி ஈசனை வழிபடுகிறாரோ அவரது சகல பாவங்களும் நீங்கி விடும் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. வில்வமானது பாதிரி, வன்னி, மந்தாரை, மா ஆகிய மரங்களுடன் தேவலோகத்தில் இருந்து வந்த "பஞ்ச தருக்கள்" என்ற சிறப்பைப் பெற்றது.

பாற்கடலில் இருந்து லட்சுமிதேவி தோன்றியபோது அவளது கரங்களில் இருந்து வில்வ மரம் தோன்றியதாக வராக புராணத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே வில்வ மரத்தை மகாலட்சுமியின் வடிவமாக கருதுகிறார்கள்.

இதனால் வில்வ மரத்தை வழிபட்டால் ஈசனின் கருணை கிடைப்பதோடு லட்சுமிதேவியின் பரிபூரணமான அருளையும் பெறலாம்.

வில்வ மரத்தில் மட்டுமன்றி வில்வ இலைகளிலும் மகாலட்சுமி வாசம் செய்வதால் வில்வ இலைகளுக்கு தனிச் சிறப்பு உண்டு.

வில்வங்களில் மகா வில்வம், கொடி வில்வம், சித்த வில்வம், கற்பூர வில்வம் உட்பட 21 முக்கிய வகைகள் உள்ளன. வில்வத்துக்கு கூவிளம், கூவிளை என்பவை உட்பட பல பெயர்களும் உண்டு.

வில்வ இலைகள் மூன்று தளம், ஐந்து தளம், ஏழு தளங்களாக இருப்பதை காணலாம். பெரும்பாலும் மூன்று இலைகளுடன் இருப்பதை வில்வ தளம் என்பார்கள். சிவனை மகிழ்ச்சிப்படுத்த ஒரே ஒரு வில்வதளம் போதும் என்பார்கள்.

மூன்று இலைகள் கொண்ட வில்வ தளம் சிவபெருமானின் மூன்று கண்களைக் குறிப்பதாக சொல்வார்கள். மேலும் வில்வதளத்தில் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகிய மூன்று சக்திகளும் அதிதேவதைகளாக இருக்கிறார்கள்.

வில்வத்தில் ஐந்து தளம், ஏழு தளங்களுடன் இருப்பவை அரிதானதாக கருதப்படுகின்றன. இவற்றை மகா வில்வம், அகண்ட வில்வம் என்று உயர்வாகச் சொல்வார்கள்.

வில்வ மரங்கள் கிளை, கிளையாக இடையிடையே முட்களுடன் காணப்படும். இதில் வில்வ தளங்களை சிவன் என்றும் முட்களை சக்தி என்றும் கிளைகளை வேதங்கள் என்றும் வேரை முக்கோடி தேவர்கள் என்றும் நம் முன்னோர்கள் போற்றி வழிபட்டுள்ளனர்.

எனவே தான் சிவபூஜை சமயத்தில் வில்வத்தால் அர்ச்சனை செய்தால் தீய சக்திகள் விலகும். தோஷங்கள் ஓடோடி விடும் என்பார்கள்.

ஒரு வில்வ தளத்தை சிவனுக்கு அர்ப்பணம் செய்தால் மூன்று ஜென்ம பாவங்கள் விலகும் என்று புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் ஒரு வில்வ தளம் என்பது லட்சம் சொர்ண பூக்களுக்கு சமமானது.

சிவனுக்கு வில்வ இலைகள் மிகவும் பிடிக்கும் என்பதால் சிலர் வில்வ இலைகளைக் கொண்டு சிவனுக்கு இலட்சார்ச்சனை, கோடி அர்ச்சனை செய்வார்கள். அத்தகையவர்களுக்கு சிவபெருமானின் அருள் மிக மிக எளிதாகக் கிடைக்கும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார வழிகாட்டல்களை மீறிய 16 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்டுள்ள கொவிட்-19 வழிகாட்டல்களை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்று 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 3,180 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-4)

## அத்துமீறி துழைந்த பிரான்ஸ் பிரஜைகள் கைது

(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தினை மீறி இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டுக்காக நான்கு பிரான்ஸ் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு நபர்களும் ஏழு நாட்களுக்கு முன்னர் பிரான்ஸிலிருந்து கப்பலின் மூலம் புறப்பட்டுள்ளனர், கப்பலின் எரிபொருள் பிரச்சினை காரணமாக அவர்கள் மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தை நோக்கி கப்பலை செலுத்தியுள்ளனர். இதன்போதே அவர்கள் மிரிஸ்ஸ கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மாத்தறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவும் உள்ளனர். (நி-4)

## பாராளுமன்ற அமர்வை 23 ஆம் திகதி நடத்த தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வை எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.


சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 150 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 500 | 500 |
| தக்காளி | 230 | 260 | 250 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 40 |
| கோவா | 100 | 80 | 100 | 100 |
| கரட் | 160 | 220 | 180 | 200 |
| பூசணி | 100 | 100 | 120 | 100 |
| புடோல் | 160 | 180 | 160 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 350 | 320 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 160 | 250 | 160 | 240 |
| வெண்டிக்காய் | 240 | 260 | 200 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 110 | 120 |
| பயற்றங்காய் | 180 | 200 | 170 | 120 |
| லீக்ஸ் | 140 | 130 | 140 | 140 |
| பீற்றூட் | 250 | 240 | 200 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 400 | 350 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 150 | 120 | 130 | 200 |
| கத்தரிதம்புள்ள | 140 | 130 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 35 | 30-40 | 30 |
| தேசிக்காய் | 140 | 80 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 70-100 | 80-120 |
| இராசவள்ளி | 250 | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 140 | 140 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 150 | 30 | 30 |
| ஈரப்பலா | 130 | 100 | -- | 80 |

# இறங்கு துறையை புனரமைக்க மதிப்பீட்டு பணிகள் முன்னெடுப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் வீசிய புரவிப் புயல் காரணமாக சேதமடைந்த இரணைதீவு இறங்குதுறையினைப் புனரமைப்பதற்கான மதிப்பீட்டுப் பணிகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் வீசிய புரவிப்புயல் காரணமாக பூநகரி, வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி ஆகிய பகுதிகளிலும் பல்வேறு பாதிப்புகள் இருக்கின்றபோதும் கிளிநொச்சி மாவட்டத்தின் தீவுப் பகுதிகளில் ஒன்றாகக் காணப்படுகின்ற இரணைதீவு இறங்குதுறை புரவிப்புயல் காரணமாக அதிகம் சேதமடைந்துள்ளது.

இவ்வாறு சேதமடைந்த இரணைதீவு இறங்குதுறையினைப் புனரமைத்துத் தருமாறு அண்மையில் விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து சேதமடைந்த இறங்கு துறை புனரமைப்பதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (4-6-315)

# கிளிநொச்சியில் பாரவூர்தி விபத்து

## சாரதி படுகாயம்



(முறிகண்டி)

கிளிநொச்சி நகரில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து சம்பவம் நேற்று அதிகாலை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அண்மையில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பார ஊர்தியின் பின்பகுதியில் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நெல் ஏற்றிச் சென்ற பார ஊர்தியின் சாரதி துயில்வதற்காக வீதியின் ஓரத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்துள்ளார்.

யாழிலிருந்து தெற்கு நோக்கி பயணித்த மற்றுமொரு பார ஊர்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துடன் மோதியுள்ளது.

குறித்த விபத்தில் மோதிய பார ஊர்தி மிகவும் சேதமடைந்ததுடன் சாரதி காயங்களுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-100-312-350)

# ஏலவிற்பனை நடைபெறாது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற வளாகத்தில் இன்று நடைபெறவிருந்த பழைய இரும்புகள் ஏலவிற்பனை நடைபெறாதென நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# பாவனைக்கு உகந்தவற்றை பயன்படுத்தவும்

(அக்கராயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் நீண்ட காலம் பயன்படுத்தப்படாமல் உள்ள பொதுக் கட்டடம் ஒன்றினை பயன்பாட்டிற்கு உட்படுத்துமாறு இப்பகுதி பொது அமைப்புகள் கரைச்சி பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கட்டடம் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக கால்நடைகளின் உறைவிடமாக உள்ளதாகவும் குறித்த கட்டடத்தினை கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கம் என்பவற்றின் பயன்பாட்டில் பயன்படுத்துவதற்கு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பயன்படுத்தப்படாதுள்ள கட்டடம் அழிந்து கொண்டிருப்பதாகவும் கிராமத்தின் பொதுத் தேவைகளுக்கு கட்டடங்கள் அவசியமானதாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏதாவது திணைக்களம் ஒன்றிற்கு இக்கட்டடம் சொந்தமானால் கட்டடத்தினைப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தாவிட்டால் ஸ்கந்தபுரம் பொது அமைப்பு ஒன்றிடம் பொறுப்பாக ஒப்படைப்பதன் மூலம் குறித்த கட்டடத்தினை சிறப்பாக பராமரிக்க முடியும்.

பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கும் அல்லது களஞ்சியமாக பயன்படுத்துவதற்கும் குறித்த கட்டடத்தினை பயன்படுத்தலாம் என பிரதேச செயலாளருக்கான கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-350)

# கைக்குண்டு மீட்பு

(தருமபுரம்)

விசுவமடு சிவில் பாதுகாப்பு முகாமில் யுத்தகாலத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த 3 குண்டுகள் சிவில் பாதுகாப்பு பிரிவினர் தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய நேற்று முன்தினம் மீட்கப்பட்டு கிளிநொச்சி நீதிமன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப்படையினரால் செயலிழக்கச்செய்யப்பட்டது என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (4-6-316)

# விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்ந்தனர் எம்.பிக்கள்



(பனிக்கன்குளம்)


முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வற்றாப்பளை கொண்டைமடு பகுதியில் விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் முகமாக நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சாள்ஸ் நிர்மலநாதன், சிறிதரன் ஆகியோர் சென்று மக்களது குறைகளைக் கேட்டறிந்துள்ளனர்.

அத்துடன் முல்லைத்தீவு வற்றாப்பளை கொண்டமடு விவசாயிகளின் வயல் நிலங்கள் வனவளத் திணைக்களத்தினால் அபகரிப்புச் செய்யப்பட்டுள்ளமை வீதிகள் புனரமைப்பு, நீர்ப்பாசன வசதிகள் உள்ளிட்ட பிரச்சினைகள் ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், முள்ளியவளை கமநல சேவைகள் நிலையத்தின் பெரும்போக உத்தியோகத்தர், விவசாயிகள் மற்றும் வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டு கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (4-6-281)

# நந்திக்கடல், வட்டுவாகல் பாலம் புனரமைப்புச் செய்வதில் இழுபறி

## கடற்றொழிலாளர்கள் குற்றச்சாட்டு



(அக்கராயன்)

முல்லைத்தீவு நந்திக் கடல் துப்புரவு செய்யப்படாமல் ஏமாற்றப்பட்டு வருவதாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் நந்திக் கடல் துப்புரவு செய்தல், வட்டுவாகல் பாலம் புனரமைத்தல் தொடர்பான கோரிக்கைகள் மாவட்டச் செயலகத்திடம் முன்வைக்கப்பட்டன.

மாவட்டச் செயலகம் நந்திக் கடலினை துப்புரவு செய்தல், வட்டுவாகல் பாலம் புனரமைத்தல் போன்றவற்றிற்கத் திட்டங்கள் வரைந்து மத்திய அமைச்சிடம் கையளித்திருந்தது.

ஆட்சிமாற்றங்களின்போதும் நந்திக் கடல் துப்புரவு செய்யப்படும். வட்டுவாகல் புனரமைக்கப்படும் அல்லது புதிதாக அமைக்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டாலும் கடந்த பத்தாண்டுகளில் இவை நடைபெறவில்லை.

இதன் காரணமாக நந்திக் கடலில் தேங்கி உள்ள சேற்றினால் இறால் உட்பட கடல் உணவுகளின் பெருக்கம் குறைந்து காணப்படுகின்றது.

கோடை காலங்களில் நந்திக் கடல் விரைவாக வற்றி கடல் உயிரினங்கள் இறக்கின்ற நிகழ்வுகள் தொடரும் நிலையில் நந்திக் கடலினை துப்புரவு செய்யுங்கள் என்ற கடற்றொழிலாளர்களின் கோரிக்கை தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.

தற்போதுள்ள வட்டுவாகல் பாலத்தில் இருந்து வற்றாப்பளை பக்கமாக 600 மீற்றர் வரை துப்புரவு செய்தாலே போதுமானது என முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் பத்தாண்டுகளுக்கு முன்னர் மாவட்டச் செயலகத்திடம் கையளித்திருந்த கோரிக்கை மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நந்திக் கடலினை நம்பி ஐயாயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-350)

உங்களின் உண்மையான தலைவர் யார்? உண்மை, நேர்மை, கடவுள் இந்த மூன்றிடமும் உங்களை முழுமையாக ஒப்படையுங்கள். -ஷில்லர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆணவம் கொண்டோரால் ஆவது ஏதும் உண்டோ?

ஆணவம் அழிவைத் தரும் என்பதையே புராண இதிகாசங்கள் எடுத்தியம்புகின்றன.

ஆணவம் தலைக்கேறினால், மெய்ஞானம் அகன்றுவிடும்.

மெய்ஞானம் என்பது ஒளிமயமானது. மெய்ஞானம் அகன்றுவிட்டால், இருள் சூழ்ந்துவிடும்.

இருள் அழிவின் அறிகுறி. ஆபத்தின் அடையாளம்.

ஆக, யாரெல்லாம் ஆணவத்தின் பிடிக்குள் அகப்படுகின்றனரோ அவர்கள் தம்மையும் அழித்து தம்மோடு சேர்ந்தவர்களையும் அழித்து விடுவர்.

எனவே ஆணவம் எனும் அகந்தையை அழித்து வெளிச்சமாகிய மெய்ஞானத்தின்பால் நம் அறிவு சேர வேண்டும்.

அதுவே நல்லதை ஆக்கவும் பெருக்கவும் உதவும்.

ஆணவம், செருக்கு, அகந்தை எனும் சொற்பதங்களைச் சுட்டிக் காட்டி அந்தப் பேராபத்தில் வீழ்ந்து விடாதீர்கள் என்ற உபதேசத்தை சைவ சமயத்தில் பலரும் எடுத்தியம்பியுள்ளனர்.

அதிலும் மனித வாழ்வை உடற்கூற்று வண்ணத்தில் பட்டியல்படுத்திய பட்டினத்தடிகள்;

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு பிடி சாம்பராய் வெந்து நீறாவதும் கண்டு... என மானிட வாழ்வின் முடிவைச் சுட்டிக் காட்டினார்.

நீ முடி தரித்த மன்னனாக இருந்தாலும் உன் முடிவு வெந்து நீறாவது அல்லது ஆறடி நிலத்தில் அடங்குவது.

இதுவே உண்மையாக இருக்கும்போது, எதற்காக நீ மமதை கொண்டு மனிதர்களை வதைக்கிறாய்.

நீ மன்னன் என்பதற்காக - பிரதமர் என்பதற்காக - ஜனாதிபதி என்பதற்காக இந்த மண்ணில் இறவாப்பெரும் வரம் பெற முடியுமா என்ன?

நீயும் ஒருநாள் இந்தப் பூமியை விட்டு ஏகி மண்ணோடு மண்ணாக போவதுதான் திண்ணம்.

இந்த உண்மையை உணராமல் ஆணவத்தின் வயப்பட்டு மார்தட்டி வீராப்புப் பேசுவதால் ஏது பயன்? என்பது பட்டினத்தடிகள் உலகு வாழ் மனிதர்களுக்கு உபதேசிக்கின்ற உண்மைத் தத்துவம்.

எனினும் இந்த உண்மையை உணராதவர்கள் இனவாதம் பேசுகின்றனர். நாட்டுக்கும் அதிகாரத்துக்கும் உரிமை கோருகின்றனர்.

சமயத்தின் பெயரால் மனித மனங்களை நோகடிக்கின்றனர்.

இவ்வாறு செய்யும் இவர்கள் ஈற்றில் பாவத்தின் பரிசை அனுபவிப்பர்.

இதுவே உண்மை. இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் மனிதம் எங்கும் வியாபித்து அன்பு எனும் ஊற்று பெருக்கெடுக்கும். மனித வாழ்வு மகிழ்வுறும்.

## பொதுமக்களுக்கான நடமாடும் சேவை

(குப்பிழான்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்தால் நடத்தப்படும் நடமாடும் சேவை 2021 இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை சங்குவேலி விநாயகர் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி நடமாடும் சேவையில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உடுவில் உப அலுவலக எல்லையில் வசிக்கும் அனைத்து மக்களும் தங்கள் வீடுகள், கடைகள், காணிகள் உட்பட்ட ஒவ்வொரு ஆதனமும் பிரதேச சபையின் ஆதனப் பதிவேட்டில் தங்களது பெயரில் பதியப்பட்டுள்ளதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். ஆதனங்களுக்குரிய ஆதனவரியை (சோலை வரி) செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும், நூலக சேவையையும் பெற்றுக் கொள்ள முடியும் என வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் அறிவித்துள்ளார். (4-6-18)

## விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திருநாட்டில் வாழும் மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை மறுதினம் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை அருள்மிகு ஸ்ரீ வாளாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் சுவாமி தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (4,6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு தமிழி அமைப்புக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் இடையிலான சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணிக்கு கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** கலைப்பீடம், பலாலி வீதியில் திரு நெல்வேலி சந்தியிலிருந்து வேம்படி சந்தி வரை, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன். அம்மன் வீதி, அன்ன சத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, அம்மன் வீதி கந்தர் மடம், நாவலர் வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி ஆத்தியடி வரை, பலாலி வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து வீரமாகாளிகோவில் வரை, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்திவரை, கம்பஸ் லேன், தின்னவேலி புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறை வேற் லிமிற் ரெட், பலாலி வீதி யாழ்ப்பாணப்பல்கலைக்கழக Graduate Studies, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், BrightInn, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், டம்றோ பலாலி வீதி, IBC தமிழ், BCCAS, யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடம், பரமேஸ்வராக் கல்லூரி ஒழுங்கை - சிவதாஸ் கட்டடத்தொகுதி, இயற்கை விஞ்ஞானபீடம், விஞ்ஞானபீடம், இராமநாதன் வீதியில் புகையிரதக் கடவை வரை, நல்லூர் ஒரு பகுதி, றியோ ஐஸ் கிறீம், கைலாசப் பிள்ளையார் கோவில் பிரதேசம், வைமன் வீதி, நாவலர் வீதியின் ஒரு பகுதி, நாவலர் வீதி இராசாவின் தோட்டம் வீதி வரை, அரசடி பழம் வீதி, இந்து மகளிர் கல்லூரி, பிரிட்டிஷ் கவுன்சில், றக்கா வீதியிலிருந்து கோவில் வீதி வரை, றக்கா வீதி சுண்டுக்குழி, TCT மண்டபம், முலவை கலட்டி, நாச்சிமார் கோவில் கே.கே. எஸ்.வீதியிலிருந்து சிவன் கோவில் கே.கே. எஸ்.வீதி வரை, அரசடி வீதி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, சிவன் பண்ணை வீதி, மானிப்பாய் வீதி, இராமநாதன் வீதி, ஹரி கணன் அச்சகம், எவகிறீன் அச்சகம், Annamalaian Sri Ragaventhirar Enter Prises, நயினாதீவு தபால்க வீதி, நயினாதீவு முருகன்கோவில் வீதி, நயினாதீவு பிரதான வீதி, பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தியிலிருந்து பரமேஸ்வரா சந்தி வரை, திருநெல்வேலி சந்தை, பனிக்கர் லேன், திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையார் கோவில் பிரதேசம், திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** திருவையாறு, சாந்தபுரம், இராணுவ வைத்திய சாலை, TLT Project, இரணை மடு நீர்ப்பாசனம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### எண்ணம் முழுவதும் இறைமயம்

❖ கடவுளிடம் எதிர்பார்ப்பு இல்லாமல் அன்பு செலுத்துவதே உயர் பக்தியாகும்

❖ கடவுளிடம் உரிமையோடு கேட்பது, பண்டமாற்று முறையில் எதிர்பார்ப்புடன் வழிபடுவது, விருப்பு வெறுப்பின்றி அவரிடம் சரணடைவது ஆகிய மூன்று வகைகளில் மனிதன் கடவுளிடம் பக்தி செலுத்துகிறான். மூன்றாவது வகையே உயர்ந்தது.

❖ மனதில் ஞானம் உதயமாகி விட்டால், செயல்களின் பலன்களை கடவுளிடமே அர்ப்பணிக்கும் மனநிலை உண்டாகும். ஒரு கணம் கூட அந்நிலையில் இறைவனை மறக்க முடியாது.

❖ அன்றாடப்பணிகள் ஒவ்வொன்றும் கடவுளாலேயே நடக்கிறது. அவரை நினைத்து உண்ணவும், உறங்கவும், பேசவும் முயற்சியுங்கள். அவரே எல்லாம் என்பதை உணருங்கள்.

❖ கடவுளின் அருளை விட அவருடைய மேலான அடியவர்களின் அருளைப் பெற முயற்சியுங்கள். அவர்களின் தொடர்பு அவ்வளவு எளிதில் ஒருவருக்கு வாய்த்து விடுவதில்லை. உண்மையான அடியவரால் ஒருவரது வாழ்வின் போக்கையே மாற்றிவிட முடியும்.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2021-13.03.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## புதிய பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்



கும்ப இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். ஏழரைச் சனி தொடங்கிவிட்டது. எனவே எதிலும் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. பொறுமையுடன் நிதானத்தையும் கடைபிடிப்பதன் மூலமே புதிய பாதையில் அடியெடுத்து வைக்க இயலும்.

### கூட்டுக்கிரக சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் புதன், வியாழன், சனி, சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. நீச்ச பங்க இராஜயோகமும் புத சுக்கிர யோகமும் இருந்தாலும் விரய ஸ்தானத்தில் இவ்வளவு கிரகம் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. தடைகளும் தாமதங்களும் செலவுகளும் ஏற்படும். இதுபோன்ற காலங்களில் குலதெய்வப் பிரார்த்தனைகளையும் இஷ்ட தெய்வப் பிரார்த்தனைகளையும் மேற்கொள்வது நல்லது. உத்தியோகத்தில் சகப் பணியாளர்களிடம் உங்கள் முன்னேற்றத்தைப் பற்றிச் சொல்வதன் மூலம் அதில் தடை ஏற்பட வாய்ப்பு உண்டு.

### மகர புதனும் கும்ப புதனும்

மாதத் தொடக்கத்தில் புதன் மகர இராசியில் சஞ்சரிக்கின்றார். வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். பெப்ரவரி 14 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு பஞ்சம-அஷ்டமாதிபதியானவர் புதன். மகரத்தில் சஞ்சரிக்கும் பொழுது மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். எனவே பொருளாதாரப் பிரச்சினை அகலும். மார்ச் 7 ஆம் திகதி உங்கள் இராசியான கும்ப இராசிக்கு புதன் வரப்போகின்றார். பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி புதன் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாகும்.

### ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

பெப்ரவரி 18 ஆம் திகதி ரிஷபத்திற்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். சகோதர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய் 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்போடு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அரசு வழியில் அனுகூலம் உண்டு.




### மகர குருவின் சஞ்சாரம்

மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்றுச் சஞ்சரிப்பது ஒருவழிக்கு நன்மை தான். சனியோடு அவர் இணைந்து நீச்சபங்க இராஜயோகத்தையும் வழங்குகின்றார். அதே நேரத்தில் பெப்ரவரி 21 ஆம் திகதி குரு அஸ்தமன நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு தன-லாபாதிபதியாக விளங்கும் குரு பகவான் அதன்பிறகு உங்களுக்கு மிகுந்த நன்மைகளை வழங்குவார். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். தாய் வழி உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர்.

### கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், பெப்ரவரி 22 திகதி கும்ப இராசிக்குச் செல்கின்றார். உங்கள் இராசிக்குச் செல்லும் சுக்கிரன் 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். எனவே வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பங்காளிப் பகை மாறும். உத்தியோக உயர்வு தானாக வந்து சேரும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் வெற்றி கிடைக்கும். பெற்றோர்களின் மணிவிழாக்களை நடத்தும் யோகம் உண்டு. இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனீஸ்வரரை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் தடுமாற்றமும் விரயங்களும் கூடும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். தாய்வழி சொந்தங்களின் ஆதரவு ஓரளவே கிடைக்கும்.

பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைப்பது அரிது. அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும்.

## பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்



மீன இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் குரு பகவான் லாபாதிபதி சனியோடு கூடியிருக்கின்றார். அதுமட்டுமல்ல, நீச்ச பங்க இராஜயோகமும் பெற்றிருக்கின்றார். லாப ஸ்தானத்தில் புதன், சுக்கிரன் ஆகிய கிரகங்களும் இருக்கின்றன. எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும் மாதமிது.

### கூட்டுக்கிரக சஞ்சாரம்

இம்மாதம் உங்கள் இராசிக்கு லாப ஸ்தானமான 11 ஆம் இடத்தில் குரு, சனி, புதன், சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களும் இணைந்து கூட்டுக்கிரகமாகச் சஞ்சரிக்கின்றன. இதன் விளைவாக புத சுக்கிர யோகமும் நீச்ச பங்க இராஜயோகமும் ஏற்படுவதால் நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும். இடம், பூமி வாங்கும் யோகமும் ஒருசிலருக்கு வாய்க்கும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்த செய்தி வந்துசேரலாம். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழிலை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள்.

### மகர புதனும் கும்ப புதனும்

மாதத் தொடக்கத்தில் புதன் மகர இராசியில் சஞ்சரிக்கின்றார். வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். பெப்ரவரி 14 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வீடு வாங்கி குடியேறும் யோகம் உண்டு. குடும்பத்தில் சுபச்சடங்குகள் நடைபெறுவதற்காக எடுத்த முயற்சி கைகூடும். மார்ச் 7 ஆம் திகதி கும்ப இராசிக்கு புதன் வருகின்றார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி மற்றும் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சியிலும் அனுகூலம் உண்டு. வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும்.

### ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் சகோதர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது உடன்பிறப்புகளின் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். நண்பர்கள் மூலம் புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பாகப் பிரிவினைகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும்.

### மகர குருவின் சஞ்சாரம்

மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்று சஞ்சரிப்பது அவ்வளவு




நல்லதல்ல. இராசிநாதன் வலிமையிழக்கும் பொழுது உடல் ஆரோக்கியத்தில் தொல்லை ஏற்படும். அருகில் இருப்பவர்களை அனுசரித்துக் கொள்வது நல்லது. பெப்ரவரி 21 ஆம் திகதி குரு அஸ்தமன நிவர்த்தியாகின்றார். அதன்பிறகு ஓரளவு நன்மை கிடைக்குமென்றாலும் நிம்மதிக் குறைவாகவே இருக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. தொழிலில் துணிந்து சில முடிவுகளை எடுக்க வேண்டிய நேரமிது.

### கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், பெப்ரவரி 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரய ஸ்தானத்திற்கு சுக்கிரன் வருவது நன்மைதான்.

3, 8 இற்கு அதிபதி விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்பதற்கேற்ப எதிர்பாராத திருப்பங்கள் பலவும் காண்பீர்கள். அதிகப்படியான வருமானம் வந்து மகிழ்ச்சியளிக்கும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு பகவானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். புனிதப் பயணங்கள் உண்டு. தாயின் உடல் நலம் சீராகும். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். பிள்ளைகளால் பெருமை சேரும். பணிபுரியும் பெண்களுக்கு ஊதிய உயர்வும் உத்தியோக உயர்வும் வருவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

(முற்றும்)

## அகிம்சைப்...

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான தமிழ் மக்களின் அகிம்சை எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.மாநகர முதல்வர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களிடம் பொலிஸார் நேற்று தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் நேற்று பிற்பகல் கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் வைத்து பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

மன்னாரிலுள்ள செல்வம் அடைக்கலநாதனின் அலுவலகத்தில் நேற்றுக் காலை பொலிஸார் வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் வருகைதந்த மாங்குளம் பொலிஸார், பாராளுமன்ற உறுப்பினரிடம் வாக்கு மூலத்தை பதிவு செய்து கொண்டனர்.

அதேவேளை, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டமை தொடர்பில் மன்னார் பொலிஸார் நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனிடம் இலங்கை தமிழரசு கட்சியின் மன்னார் அலுவலகத்தில் வைத்து வாக்கு மூலத்தை பெற்றுச் சென்றுள்ளனர்.

இதேவேளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகிய இருவரிடமும் மாங்குளம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த போராட்டத்தில் நீதிமன்ற உத்தரவை மீறி கலந்து கொண்டதாக குற்றம் சாட்டி பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரிடம் யாழில் வைத்து மாங்குளம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனிடம் நேற்று பொலிஸார் விசாரணைகளை நடத்தி வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையங்களின் பொலிஸார், 3 மணிநேரம் விசாரணை மேற்கொண்டு வாக்குமூலத்தைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனிடம் வட கிழக்கில் உள்ள எட்டு பொலிஸ் நிலையங்களில் இருந்து வந்த பொலிஸ் உத்தியோகத்தகர்களினால் நேற்று வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திற்கு வருகைதந்த பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்கு மூலங்களை பதிவு செய்து கொண்டனர்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் பேரணியில் மன்னார் மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளில் கலந்து கொண்டமைக்காக யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனிடம் மன்னார் மற்றும் பருத்தித்துறை குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் விசாரணைகளை மேற்கொண்டனர்.

நல்லூரில் அமைந்துள்ள யாழ்.மாநகர சபை முதல்வர் அலுவலகத்திற்குச் சென்ற பொலிஸார் குறித்த விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-3,18,33,100)

## விபரீத முடிவெடு...

உயிரிழந்தார்.

கட்டிடப் பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனத்தை நடத்திவரும் அச்செழு பகுதியைச் சேர்ந்த தவநேசன் யதுர்சன் (வயது-26) என்ற இளம் வர்த்தகரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவரின் சகோதரன் பிரான்ஸ் நாட்டில் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மரண விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,18)

## மிருசுவிலில்...

வர்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 366 பேரின் பிசிஆர் மாதிரிகள் சோதனையிடப்பட்டன. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 462 பேரின் மாதிரிகள் சோதனையிடப்பட்டன.

இதில், யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியானது. அவர் அண்மையில் வெளிமாவட்டத்திற்கு சென்று வந்தவர். நோய் அறிகுறிகள் தென்பட்டதையடுத்து நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சென்ற நிலையில், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்று உறுதியானது.

நெல்லியடி பொதுச்சந்தையில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் சோதனையில் ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார்.

அச்சுவேலி சந்தையில் அண்மையில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளரின் குடும்ப உறுப்பினர் ஒருவரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார்.

மிருசுவில் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். அண்மையில் வங்கியில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட ஒருவரின் குடும்ப உறுப்பினர்களே தொற்றிற்குள்ளாகியுள்ளனர்.

கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் 2 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். (ம-3,18,60,316)

## தஞ்சம்...

தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றபோதே இவ்வாறு கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ம-3)

## சீனாவுக்கு...

படுத்தி தமது பெயர் பலகைளை நாட்டியுள்ளது. (ம-3)

## +506...

அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 78,926 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## நெல்லியடியில்...

வரும் வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம-3,18,60)

## காரைநகரில்...

இந்நிலையில் காணிகள் அபகரிக்கப்படவுள்ள விடயத்தை முன்கூட்டியே அறிந்த காணி உரிமையாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இணைந்து காணிகளை அளவீடு செய்ய வந்த நிலஅளவைத் திணைக்கள அதிகாரிகளை இடைமறித்து கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தியதுடன் காணிகள் அளவீடு செய்வதற்கும் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

இதனையடுத்து காணிகளை அபகரிப்பதற்கான அளவீடுகள் செய்யாமலேயே நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர். (ம-3,18,33)

## மக...

வந்த தாயார் ஒருவர் நேற்றுமுன்தினம் சுகயீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

கைவேலி - புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயாரான சுந்தரலிங்கம் கனகமணி என்பவரே சுகயீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனான சுந்தரலிங்கம் சுரேஷ்குமார் கடந்த 2009ஆம் ஆண்டு அரசால் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டார்.

இன்றுவரை மகனை காணமுடியாத நிலையில் இவ்வாறு மரணமடைந்துள்ளார். (ம-3)

## ஜெனிவாவில்...

ழைப்பை வழங்குமாறு கோரி அரசாங்கம் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் ஜெயனாத் கொலம்பகே இதனைத் தெரிவித்துள்ளார். (ம-3)

## அதிர்ச்சியில்...

ந்து அதிர்ச்சியில் மயங்கி விழுந்த குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இதில் அந்திரான் சங்குவேலியை சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயான விக்னேஸ்வரன் வனசேகரி (வயது-54) என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த 17 ஆம் திகதி குறித்த குடும்ப பெண்ணின் சகோதரி விபத்தின் மூலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தொலைபேசி முலம் அறிந்ததையடுத்து அதிர்ச்சியில் மயக்கமடைந்து யாழ்.போதன வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த குடும்பப் பெண் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொன்டார். (ம -3)


தன நிதானய
திகதி - 2021.02.19
சீட்டிழுப்பு இலக்கம் - 440
L 03 11 36 60

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 19.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2698
A 18 27 43 64

மஹஜன சம்பத
திகதி 2021/02/19
சீட்டிழுப்பு இலக்கம் 4403
Y 2 0 5 9 1 4

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/02/19
சீட்டிழுப்பு இலக்கம் 1576
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 02 14 34 51

மெகா பவர்
திகதி 19/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0770
B 17 29 57 62 74

அத கோடிபதி
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1199
சீட்டிழுப்பு திகதி: 19.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 109,847,490
வெற்றி இலக்கங்கள்
06 41 56 57 H

சனிதா
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3529
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 19.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 33,540,094
வெற்றி இலக்கங்கள்
08 22 40 53 T

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி : 19.02.2021
வெற்றி வாரம் : 3080
வர்ணம் : கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள்
09 20 22 30
கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 13,047,928

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1373
சீட்டிழுப்பு திகதி 19/02/2021
நிறம் இளஞ் சிவப்பு
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
M 07 63 69 76
அடுத்த சுப்பர் ஜக்பொட்
69,822,055/=

வசனா
சீட்டிழுப்பு வாரம் 692
19.02.2021
M 06 09 27 44
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.
75,591,480
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வேலையாள் தேவை

மில் வேலைக்கு
வேலையாட்கள் தேவை.
(ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு)
அளவெட்டி, மல்லாகம்
பகுதிகளை அண்மித்தவர்களுக்கு
முன்னுரிமை உண்டு.
[தங்குமிட வசதியுண்டு] (5837)

**077 529 3042**

## கறை நீக்க

சோ (F) பாக்கள், அலுவலக
கதிரைகள் மற்றும் மெத்தைகள்
என்பனவற்றை நவீன இயந்திங்கள்
மூலம் கறை நீக்கி புதுப்பொலிவு
பெற அழையுங்கள். (5837)

Mr. Tidy

**077 224 2787**

## DELIVERY BOYS தேவை

முழு நேரம் & பகுதி நேரம்




(5844)

யாழ்ப்பாணத்தில் Food Delivery செய்யும் Cookoo நிறுவனத்திற்க முழுநேர மற்றும் பகுதி நேரத்திற்கான Delivery Boys தேவை!

ஆர்வம் உள்ளவர்கள் மற்றும் மேலதிகமான விபரங்களை அறிந்துகொள்ள விரும்புவோர் கீழ் காணும் இலக்கம் மூலமாக தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு
+94 77 640 2343 /cookoo.lk

## வேலையாட்கள் தேவை

மேசன், கூலி கட்டடவேலை
போன்ற வேலைகளுக்கு
வேலையாட்கள் தேவை. (5839)

**074 010 7402**

## காணி தேவை

கல்லுண்டாய் வீதியில் காக்கைதீவு
மீன் சந்தைக்கும் அராலி பாலத்திற்கும்
இடைப்பட்ட இடத்தில் 1 ஏக்கர் அளவுடைய
வெற்றுக்காணி உடனடியாகத் தேவை.
(தரகர் தேவையில்லை.) (5829)

**077 129 8201**

## அன்பொளி கல்வியகம்

**இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.**

ஆசிரியர் **திரு. வே. அன்பழகன்** அவர்களின்
தரம் 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சைகள்
ஆரம்பமாகின்றன.

- 1 ஆவது பரீட்சை ஆரம்பம் 21.01.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 - 5.00 மணி வரை.
- பரீட்சைக்கு மாத்திரம் தோற்றவிருக்கும் மாணவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.
- பாடசாலைக்குத் தனியாகவும் தனியார் கல்வி நிலையங்களுக்கு தனியாகவும் பரீட்சை வினாத்தாள்கள் வெளியிடப்படுகின்றன. பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். (C-1483)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## PEARSON INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Academic
IELTS General
IELTS Life skills.

- # Weekday classess
- # Weekend Classess
- # Personal Classes
- # Group Classes
- # Lecturers are above band 8 Scorers and professionally qualified

98% Students in IELTS Scored above 6.5
Learn the techiniques to score above 6.0
Unbeatable Success rate in Northern Province

Registered Exam Centre for IELTS
Special discounts for upcoming registration
074 188 7878 infopearsonicollege@gmail.com
idp IELTS
No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, Jaffna

## அகஸ்திய இயற்கை மூலிகை மருத்துவ நிலையம்

உங்கள் அனைத்து விதமான நாட்பட்ட வலிகள்,
மூட்டு வியாதிகள், முள்ளந்தண்டு பிரச்சினை,
கொலஸ்ரோல், நீரிழிவு, உடல் பருமன் மற்றும்
அனைத்து விதமான அழகு சிகிச்சைகளும் இயற்கை
முறையில் தீர்வு அளிக்கப்படும்.

மற்றும் உங்கள் குடும்ப பிரச்சினைகள், தொழில் பிரச்சினைகள், கல்வி, பொருளாதாரம், வெளியூர், கடன், இலட்சியங்களை எளிதில் அடைதல் போன்ற பல வாழ்வியல் பிரச்சினைகளுக்கு நீங்களே சுலபமாக தீர்வைக் காண யாழ். நகரில் ஒரே ஒரு மையம்.

மேலதிக தொடர்புக்கு **077 912 8944**
இல. 264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (C-1480)

## அன்னா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= 070 3305500 075 3305500 (C-1418)

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

| | | | |
|---|---|---|---|
| 976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1456)

**0768226240** DHL

## விளம்பரப் பலகைகளுக்கு...

# ANDRA வின் அதிரடி விலைக் குறைப்பு

**3 வருட உத்தரவாதம்** (C-1474)

| | | |
|---|---|---|
| டிஜிட்டல் விளம்பர பலகை | 220/- | (சதுர அடி) |
| டிஜிட்டல் விளம்பர பலகை (ஒளியூட்டப்பட்டது) | 590/- | (சதுர அடி) |
| டிஜிட்டல் பனர் | 45/- | (சதுர அடி) |
| 3D Embossed விளம்பரப்பலகை | 1950/- | (சதுர அடி) |

(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

தற்பொழுது புதிதாக அறிமுகபடுத்தப்பட்டுள்ள மின்சாரத்தை சிக்கனப்படுத்தக்கூடிய
முற்றிலும் LED Light களிலான விளம்பரப்பலகைகளை எம்மிடம் உத்தவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

இல.379, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: **077 748 1696 / 077 220 9527**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.